



முப்படை வீடு

ஆக்கியோன் :

P. N. நாகநாதன்
ஆசிரியர், பரமக்குடி.

முரளிதாஸ் பதிப்பகம்
11/303, சுப்பிரமணிய சுவாமி கோவில் தெரு
பரமக்குடி-623707.
(இராமநாதபுரம் மாவட்டம்)

1976 ரூ. ஒன்று.

95

முப்படை வீடு

ஆசிரியர்
P. N. நாகநாதன்,
ஆசிரியர்
சௌராஷ்ட்ர உயர்நிலைப்பள்ளி,
பரமக்குடி, 623707
(இராமநாதபுரம் மாவட்டம்)

பெரியம்பலம் ராம. நாகேந்திரய்யர்,
முரளிதாஸ் பதிப்பகம்,
11/303. சுப்பிரமணிய சுவாமி கோவில் தெரு,
பரமக்குடி (இராமநாதபுரம் மாவட்டம்)
Pin. 623707

விலை ரூ. 1—00

முதற்பதிப்பு : 1976

பிரதிகள் பெறுமிடம் :

P. N. நாகநாதன்,
ஆசிரியர்,
11/303 சுப்பிரமணிய சுவாமி கோவில் தெரு,
பரமக்குடி - 623707.

(மற்றும்)

காந்திய நூல்கள் விற்பனை நிலையங்களில்

விலை ரூபாய் ஒன்று

அச்சிட்டோர் : பாரமவுண்ட் பிரிண்டர்ஸ்.
47, தெற்கு கிருஷ்ணன் கோவில் தெரு, மதுரை.

முன்னுரை

காந்தி அடிகள் வலியுறுத்திய கிராம நிர்மாணப் பணி-யைச் செயலாற்றுகின்ற முறையில் புதுடெல்லியைத் தலைமை யகமாகக் கொண்டுள்ள தானே இயங்கும் அணி (Voluntary Action Cell, New Delhi - 110001) யின் பேராதரவினாலும் காந்தி சமாதான நிறுவனம் திருவாரூர் கேந்திரத்தின் ஆதரவினாலும் உள்ளூர்ப் பெருமக்களின் ஒத்துழைப்பினாலும் இராமநாதபுரம் மாவட்டம் வேந்தாணி (பரமக்குடி) யில் கல்லூரி மாணவர்களுக்கென்று ஒரு முகாம் நடத்தக் கூடிய வாய்ப்பைப் பெற்றேன். அம் முகாம் தொடர்பாக திருச்-செங்கோடு காந்தி ஆசிரமம், காந்தி கிராமம், மதுரை காந்தி மியூசியம் ஆகிய தலங்களைக் காணும் பேறு பெற்-றேன். அப்பொழுது அவ்விடங்களில் நடைபெற்று வரும் காந்திய நிர்மாணப் பணிகளை எல்லோர்க்கும் தெரியப்-படுத்த வேண்டுமென்னுமவாவினால் இச் சிறு நூலை எழுதி வெளியிட்டுள்ளேன். இந்நூல் உருவாக ஒத்துழைத்த திரு. N. கிருஷ்ணசாமி, திரு. ஈ. முத்துராமலிங்கம், மற்று-முள்ள அன்பர்கள் அனைவருக்கும் என் நன்றி. மேலும் இந்நூலுக்கு ஆசியுரை வழங்கியுள்ள மதுரைக் காந்தி என்று எல்லோராலும் புகழப்படுகின்ற ஐயா திருமிகு. N. M. R. சுப்பராமன் அவர்கட்கும், அணிந்துரை வழங்கி-யுள்ள திரு. ஈ. முத்துராமலிங்கம், செயலாளர், காந்தி சமாதான நிறுவனம், திருவாரூர் அவர்கட்கும், வாழ்த்துச் செய்தி அனுப்பிச் சிறப்பித்துள்ள மதுரை சித்தாஸ்ரமம் சித்த நரஹரி அவர்கட்கும், கவிஞர். சட்டமுத்தன் அவர்கட்கும், தலைமைத் தமிழாசிரியர் திரு. வித்துவான். K. இராம னுதன் அவர்கட்கும், எங்கள் பள்ளித் தாளாளர் டாக்டர்

திரு K V. சுப்புராம் M. B., B. S. அவர்கட்கும், தலைமை ஆசிரியர் திரு. D N இராமமூர்த்தி B. Sc., B. T. அவர்கட்-கும் சென்னை மருந்தாய்வாளர் திரு. M. G. நாகநாதன் B. Pharm அவர்கட்கும் அறிமுக உரை எழுதியுள்ள திரு. தா. கு. சுப்பிரமணியன் M. A. Dip. in Ling. அவர்கட்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். செம்மையான முறையில் உள்ளம் கவரும் வண்ணம் அழகாக இந்நூலை அச்சிட்டுக் கொடுத்த மதுரை பாரமவுண்ட் அச்சகத்தார்க்கும் என் நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

பெரியோர்களும் அன்பர்களும், நண்பர்களும் இந்நூலைப் படித்துப் பயனடைய வேண்டுகிறேன்.

(Sd.) P. N. Naganathan.

டாக்டர். ரு. சுப்பிரமணியன், M.A. Dip. in Ling., மதுரை,
தமிழ்த்துறை, மதுரைக் கல்லூரி. 23—9—76

அறிமுகம்

ஒருவர் ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு மாறுவாரானால் அத்துறையில் முன்புகொண்டிருந்த ஈடுபாட்டைவிட முன்னிலும் பன்மடங்கு ஈடுபாடு கொண்டு புதுத் துறையின் முன்னேற்றத்திற்குச் செயல்படுவர் என்பது திண்ணம். அம்முறையில் பரமக்குடி சௌராஷ்ட்ர உயர்நிலைப் பள்ளியில் நல்லாசிரியராய்ப் பணிபுரியும் உழுவலன்பர் கெழுதகை நண்பர் திருமிகு P. N. நாகநாதன் அவர்கள் 'முப்படை வீடு' என்னும் சிறிய, ஆனால் சீரிய நூலை வெளியிடுகிறார். மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிது என்றவாறு நூல் சிறிதே ஆயினும் அடங்கியுள்ள கருத்துக்கள் செறிவுடைத்தன. கல்லூரி மாணவர்க்கு நடத்திய முகாமின் விளைவாக இந்நூல் உருவாகியுள்ளது. நூலாசிரியர் இந்நூலுக்குக் கொடுத்துள்ள தலைப்பே அவர்தம் நுண்மாண் நுழைபுலத்தை வெளிப்படுத்தியிருக்கிறது. பச்சை மயில் மீது இச்சையோடு வரும் முருகப்பெருமான் எழுந்தருளி அடியார்க்கு அருள் அமுதம் வழங்கிவருவதை அறுபடை வீடு உணர்த்தி நிற்பதைப்போல், தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டு, பாழ்பட்டு நின்ற தாமோர் பாரத தேசந்தன்னை வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா இருந்து, திட்டங்களை வகுத்து, அன்பு, அஹிம்சை, சத்தியம் ஆகியவைகளை ஆயுதங்களாகக் கொண்டு, கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று செய்து சுதந்திரம் பெற்றுத் தந்த உத்தமர் அண்ணல் காந்தி அடிகளின் திருப்பாதம் பட்டு புனிதமடைந்த திருத்தலங்களான திருச்செங்கோடு காந்தி ஆசிரமம், காந்திகிராமம், மதுரை காந்தி மியூசியம் ஆகியவைகளை இந்நூலில் படம்பிடித்துக் காட்டும் நூலாசிரியர் பட்டறிவு பாராட்டற்குரியது.

எளிய நடையில் அரிய கருத்துக்களை வெளியிடுகிருர் நூலாசிரியர். எடுத்துக்காட்டாக திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்திலுள்ள இராஜாஜி நினைவாலயத்தைக் கண்டு அவருடைய உருவச்சிலையைப் பார்த்து அதற்கு நூலாசிரியர் கொடுத்துள்ள விளக்கம் பாராட்டற்குரியதாய் அமைந்—துள்ளது.


இராஜாஜி அவர்களின் திருவுருவச்சிலை தாங்கிய நினைவாலயம் உள்ளத்தை உருக்கும்வண்ணம் உள்ளது. அவ்வுருவத்தை உற்றுப் பார்த்துக்கொண்டு ஒரு நிமிடம் நின்ருல், "ஏன் என்னையே உற்றுப் பார்க்கிருய்; உனது இருப்பிடத்திற்குச் செல்; நான் வாழ்ந்த வாழ்க்கைப் பாதையை, லட்சியத்தை மையமாகக் கொண்டு ஆக்கப் பணியில் ஈடுபடு; இலட்சிய வேட்கை கொண்டவனுக இரு. வ்யக்தி பக்தி (Hero Worship) யுடன் இருப்பது சரியன்று; கொள்கை வீரனுக மாறு" எனப் பேசாமல் பேசுவதுபோல் தோன்றுகிறது என்ற ஆசிரியரின் விளக்கம் படித்து இன்புறற்பாலது. இவ்வாருன விளக்கங்கள் பல இந்நூலில் இடம் பெற்றுள்ளதைக் காணலாம். எளிய நடையில் அரிய கருத்துக்களை வெளியிட்டுள்ள நூலாசிரியர் P.N நாகநாதன் அவர்களுக்குத் தமிழ் உலகம், காந்திய நிறுவனங்கள் என்றும் கடமைப்பட்டுள்ளன. மாணவர்களும், ஆசிரியர்களும், மற்ற பெரியோர்களும் இந்நூலை வாங்கிப் படித்துப் பயனடைய வேண்டுகிறேன். இன்னும் இவை போன்ற பல நூல்களை வெளியிட்டு மக்கட் சமுதாயத்திற்கு நூலாசிரியர் பல்லாற்ருனும் தொண்டுபுரிய எல்லாம் வல்ல அங்கயற்கண்ணியுடன் எழுந்தருளியுள்ள ஆலவாய் அண்ணல் அருள் வழங்குவாராக.

நன்றி, வணக்கம்.

அன்பன்,
தா. கு. சுப்பிரமணியன்,
23—9—76.

N. M. R. Subbaraman

Ravi,
3, Vallabbhai Road,
Madurai-2,
1—9—76.



N. M. R. S. & D. K. S.

ஸ்ரீ P. N. நாகநாதன் காந்திய, சர்வோதயக் கொள்கைகளை அறிய நல்ல வாய்ப்புகள் பெற்று இருக்கிறார். அதையொட்டி அக்கொள்கைகளை நிறைவேற்றும் மூன்று நிறுவனங்களை நேரில் பார்த்து சில நாட்கள் தங்கி, அவைகள் செய்து வரும் பணிகளை நேரில் கவனித்து அறிந்துள்ளார். மேற்கூறிய கொள்கைகளை அறிய விரும்பும் அன்பர்களுக்கு இச்சிறு நூல் மிகுந்த பயன் அளிக்கும் என்று நம்புகிறேன். ஆசிரியர் சிரத்தையுடனும், எளிதாகவும் எழுதியுள்ளார்.

காந்திய, சர்வோதயக் கருத்துக்கள் பரவ, இந்நூல் நன்கு பயன்படும் என நம்புகிறேன்.

N. M. R. சுப்பராமன்.

ஈ. முத்துராமலிங்கம்

செயலாளர்

காந்தி சமாதான நிறுவனம்
திருவாரூர்.

1—9—76.

வாழ்த்துரை

பெருமதிப்பிற்குரிய ஆசிரியப் பெரியார்

திரு. P N. நாகநாதன் அவர்கள் அயராது உழைத்து அரும்பாடுபட்டு உருவாக்கி இருக்கும் "முப்படை வீடு" என்ற நூல் மிகச்சிறந்த முறையில் அமைந்துள்ளது. ஆசிரியரை மனம் கனிந்து பாராட்டுவதில் மிகவும் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். காந்தியப் பணி சிறக்க இவர்கள் ஆற்றிய தொண்டுகளில் எல்லாம் சிகரமாக அமைந்துள்ளது இந்த நூலினை உருவாக்கியது.

பல்லாயிரம் காந்திய அன்பர்கள், ஆசிரியர்கள் சார்பாக இப்பெரியாரை பாராட்டி வாழ்த்துகிறோம்.

(ஒப்பம்) ஈ. முத்துராமலிங்கம்

சித்தாச்ரமம், மதுரை

பூஜ்ய ஸ்ரீ ஸித்த நரஹரி சுவாமிகள் அருளிய

வாழ்த்துப்பா

மோகனதாஸ் காந்திமகான் உண்மைநெறி சாற்றியுயர்
நாகநாதன் பல்லாண்டு நன்னலமாய் - யோகமிகு
சித்தாச்ரம மச்சித்தர் சீரருளால் ஞானமிகு
உத்தமராய் வாழ்க உயர்ந்து.

மாதாபட்டணம், கவிஞர் சட்டமுத்தன் நல்கிய

வாழ்த்துப்பா

நித்தியம் நற்பணி நீடுறச் செய்திடும்
நெஞ்சமும் இன்சொலும் நேயமும் மிக்குள
நித்தில நாகநா தத்திரு நண்பனே
நின்னைநான் நேயனுய் நேர்ந்ததென் பாக்கியம்
சத்தியக் காந்தியார் சால்புகழ் ஓங்கிடத்
தற்பொழு தப்பணி தாட்டிய மாய்ச்செயும்
முத்திருத் தலங்களை முற்படக் காட்டிடும்
முப்படை வீடுகள் செப்பியோய் வாழிய.

M. G. Naganathan, B. Pharm.,
Drugs Inspector.

Madras City,
23–8–76

முப்படை வீடு படைத்திருக்கும் ஆசிரியர் திரு P. N. நாகநாதன் அவர்கள் பாராட்டுக்குரியவர். இக் கட்டுரை வாயிலாக நம்மையெல்லாம் காந்தி ஆஸ்ரமம், காந்தி கிராமம் காந்தி மியூசியம் அழைத்து சென்று அங்கு நடக்கும் ஆக்க வேலைகளையும் தரிசிக்க வைக்கும் ஆசிரியருக்கு நாம் என்றும் கடமைப்பட்டவர்கள். அண்ணல் காந்தியடிகள் காட்டிய பாதையில் நாம் தவறாது நடப்போம் என உறுதிபூண்டு இந்த நூலை படிக்க ஆரம்பிப்போமாக.

வளர்க காந்தீயம்! வெல்க காந்தீயம்!

இவண்

(ஒப்பம்) மா. கோ. நாகநாதன்,

DR. K. V. SUBBURAM. M.B., B.S.,
Correspondent,
Sourashtra High School &
Sourashtra Primary School,
Paramakudi-623707.

"K. V. CLINIC"
4/270, Gandhiji Road,
Paramakudi.
7—9—76.

Phone Residence : 456
Clinic : 405



வாழ்த்துரை

நம் பள்ளி ஆசிரியர் திரு P. N. நாகநாதன் அவர்கள் எழுதியுள்ள "முப்படை வீடு" நூல் மிகச் சிறந்த முறையில் அமைந்துள்ளது. மகாத்மா காந்தியாரைப் பற்றி அரிய பல செய்திகளும் படம் விரித்துக் காட்டப் பெற்றுள்ளது. இவைகளைப் பற்றி அறிந்திராத இளம் தலைமுறையினர்க்கு இது சிறந்த வழி காட்டியாக விளங்கும்.

இந்நூல் ஒவ்வொரு பள்ளி, கல்லூரி மாணவனும் படித்துப் பயன்பெற விரும்புகிறேன்.

அவர்பணி சிறக்க என் நல்வாழ்த்துக்கள்.

இவண்,

(ஒப்பம்) *K. V. SUBBURAM.*

டாக்டர். கே. வி. சுப்புராம், எம்.பி.,பி.எஸ்

D. N Ramamurthy B SC., B. T.
Headmaster,
Sourashtra High School,
Paramakudi.

பரமக்குடி.
27—8—76

திரு. P. N. நாகநாதன் அவர்கள் எழுதியுள்ள 'முப்படைவீடு' என்னும் நூல்; மகாத்மா காந்தியின் கொள்கைகளை விளக்குவதுடன்; காந்தி வழி நின்று, அவர் கொள்கைகளைச் செயல் படுத்திவரும் காந்தி ஆஸ்ரமம், காந்தி கிராமம், காந்தி மியூஸியம் ஆகிய இடங்களையும் படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. இது, ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய சிறந்த நூலாகும். அன்னாரின் முயற்சிகள் வெற்றி பெற என் உளங்கனிந்த வாழ்த்துக்களைக் கூறிக்கொள்கிறேன்.

(Sd) *D. N. ராமமூர்த்தி*

வித்துவான். **கே. இராமநாதன்**
தமிழாசிரியர்
ஸௌராஷ்டிர உயர்நிலைப்பள்ளி மதுரை

ஒன்று உலகத்துப் பொன்றுது - அழியாது - நிற்பது ஒன்றே ஒன்று தான் - அதுவே உயர்ந்த புகழாகும் - உலகத்துப் பிறந்த கோடிக் கணக்கான மக்களில் ஒரு சிலரே அத்தகைய புகழால் இறவாத பெருவாழ்வு பெற்று விளங்குகின்றனர். அவர்களுள் சிறந்து விளங்கும் ஒருவரே உத்தமர் காந்தியடிகள் ஆவார். உலகு உய்ய வகுத்த நிர்மாணத் திட்டங்களைச் செயற்படுத்தி நிறைவேற்றும் பணிபூண்ட தலங்களைக் குறித்து நண்பர் திரு. நாகநாதன் 'முப்படை வீடு' என்று மகுடமிட்டு இந்நூலைப் படைத்துள்ளார். இனிய தமிழில் எளிய நடையில் எல்லோரும் படித்துப் பயன்பெருக்கும் வண்ணம் சுருங்கக் கூறல் விளங்க வைத்தல் என்னும் உத்தியுடன் இந்நூல் எழுதப் பெற்றுள்ளது.

இந்நூலாசிரியர் கதர் நெசவையே வாழ்வாகக் கொண்ட கதராடையன்றி இதர ஆடையணியாத, அடக்கம் சான்ற தூய காந்தீயத் தொண்டரின் வழித்தோன்றலாவார். அருள் நெறி சார்ந்த, தொண்டார்வம் மிக்க பள்ளி ஆசிரியர் பணி புரியும் இவரது இந்த முதன் முயற்சிக்குத் தமிழ் கூறு நல்லுலகம் தக்க ஆதரவு தந்து மிக்க ஊக்கம் ஊட்டுமென நம்புகிறேன்.

> உற்ற நோய் நோன்றல் உயிர்க்(கு) உறுகண்
>
> செய்யாமைஅற்றே தவத்திற்(கு) உரு.'

என்று தெய்வப் புலவர் வகுத்த தவ இலக்கணப்படி வாழ்ந்து காட்டிய பெருந்தவ முனிவர் - காந்தியண்ணலாரின் இந்த முப்படை வீடுகளும் இவற்றைக் குறித்து விளக்கும் இந்நூலும் ஆறுமுகப் பெம்மானின் ஆறுபடை வீடுகளைப்போல் காலமெல்லாம் காந்தீய தத்துவக் கதிர் பரப்பி நிலைகொண்டு விளங்குமாக.

அறம் வாழ்க - தொண்டு சிறக்க – நலம் பெருகுக.

அன்பன்,
(ஒப்பம்) *கே. இராமநாதன்*
9-9-76

நன்றி!

முப்படை நூலில்
விளம்பரங்கள் கொடுத்து
ஆதரித்த அன்பர்களுக்கும்
நன் கொடை வழங்கிய
பண்பாளர்களுக்கும்
மிக்க நன்றி.

— ஆசிரியர்

Grams: SATYAGRAHA

Phone: 272396
272397
272398

VOLUNTARY ACTION CELL

Sponsors : Association of Voluntary Agencies for Rural Development Central Relief Committee, Gandhian Institute of Studies, Gandhi Peace Foundation Society for Developing Gramdans, Young Men's Christian Association

Chairman: K. S. RADHAKRISHNA
Director : N. KRISHNASWAMY
221 DEEN DAYAL UPADHYAYA MARG
NEW DELHI - 110001

31 July 1976

CERTIFICATE

This is to certify that Shri P.N. Naganathan organised a student camp at Vendoni, as part of the 'Youth For Development Campaign' sponsored by the Voluntary Action Cell from May 10 to 20, 1976. We appreciated his honestand sincere efforts to make the camp meaningful both to the participating students as well as to the village community.

We wish him all success in his further endeavours to increase the social awareness of school and college students, so that the nation as a whole can benefit from their knowledge and skills.

(N.Krishnaswamy)
Director

BLUE PRINT FOR INDIA'S PROSPERITY

PRIME MINISTER'S

20 POINT PROGRAMME

To bring down the prices of essential commodities.

Workers' association in industries - New schemes.

Economy in Government expenditure.

New Development plan for handloom sector.

Tax evaders and economic offenders to be punished.

Youths in hostels to receive essential commodities at controlled prices.

Plan for liquidation of rural indebtedness.

Order for confiscation of smugglers' properties.

Improvement in quality and supply of people's cloth.

New apprenticeship scheme to enlarge employment.

Thermal stations to be started under central control.

Provision of books and stationery at controlled prices.

Road transport expansion through national permit scheme.

Ownership of vacant lands and dwelling units to be restricted

Good house sites for landless and weaker sections.


Review of laws fixing minimum agricultural wages.

Abolition of bonded labour.

Middle class people to get income tax relief.

More hectares to be brought under irrigation.

Early implementation of agricultural land ceiling.



காந்தி கிராமத்தில் நம் பாரதப் பிரதமர்

உ

முப்படை வீடு.

புதுடெல்லியைத் தலைமையகமாகக் கொண்டுள்ள 'தானே இயங்கும் அணி' (Voluntary Action Cell, New Delhi-110001 யின் பேராதரவினாலும், 'காந்தி சமாதான நிறுவனம், திரு-வாரூர் கேந்திரத்தின் ஆதரவினாலும், கிராமப் பணிக்காகக் கல்லூரி மாணவர் பயிற்சி முகாம்கள் (Youth for Development Camp) தமிழ் நாட்டில் பன்னிரண்டு இடங்களில் 10—5 —1976 முதல் 20—5 '76 முடிய நன்கு நடந்தேறின.

அதனை நடத்தும் முகாம் அமைப்பாளர்கள், காந்தி மியூஸியம், காந்தி கிராமம் ஆகிய இடங்களில் முன்பயிற்சி பெறவும், அதைச் செவ்வனே நடத்தி முடித்த பின்பு, முகாம் நிறை குறை ஆய்வு செய்வதற்கு திருச்செங்கோடு, காந்தி ஆசிரமத்திலும் கூடினோம்.

அதுபோழ்து இராமநாதபுரம் மாவட்டம் வேந்தோணி (பரமக்குடி) முகாமை நடத்திய அமைப்பாளனாகிய அடியேன். காந்தி மகாத்மாவின் திருநாமத்தைக்கொண்டு, அவரது செயல் திட்டங்களை நிறைவேற்றிவரும், திருச்செங்கோடு காந்தி ஆசிரமம், காந்தி கிராமம், மதுரை, காந்தி மியூசியம் ஆகிய இம்மூன்று திருத்தலங்களில் கண்ட காட்சிகளையும், கேட்டறிந்த பேருண்மைகளையும், உய்த்துணர்ந்த அனுபவங்களையும் தொகுத்து இக்கட்டுரையில் வரைய முயன்றுள்ளேன்.

கிடைத்தற்கரிய இம்மாபெரும் பேற்றினை எனக்களிக்க உறுதுணை நின்றவரும், அன்பு, அறிவு, அடக்கம் இவற்றைத் தம்மகத்தே கொண்டொழுகும் திரு. என். கிருஷ்ணசாமி

(இயக்குனர், தானே இயங்கும் அணி, புதுடெல்லி-1.) அவர்களுக்கும், திரு. ஈ. முத்துராமலிங்கம், (செயலாளர், காந்தி சமாதான நிறுவனம், திருவாரூர் கேந்திரம்) அவர்களுக்கும் எனது நன்றியையும் வணக்கத்தையும் கனிவான முறையில் காணிக்கையாக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

பாரதநாடு வரலாறு படைக்கப்படாத அனுதி காலம் முதற்கொண்டே தனக்கெனத் தனியொரு பண்பாட்டை வகுத்துக்கொண்டு, அதனை உலகிற்களித்துப் பெயரும் புகழும் கொண்டதென்றால் அது உண்மை. வெறும் புகழ்ச்சியன்று. அப்பண்பாட்டைக் காத்து, வளர்த்து வந்த பெருமை, பாரத நாட்டில் அவதரித்த மகான்களையும், முனிபுங்கவர்களையும், நாட்டிற்காகத் தன்னுயிரை ஈந்து மறைந்த மாமன்னர்களையும் சாரும்.

அவர்கள் காட்டில் மலர்ந்து வாடிக் கருகி உதிர்ந்து யாருக்கும் எவ்விதப் பயனுமின்றி மடிந்த மலர்கள் போலன்றி, கோயிலில் வளர்ந்து பூத்த செடியின் மலர்களைப் போல சமுதாயத்திற்கென்றே வாழ்ந்து, தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்து மணம் பரப்பி புகழை நிறுத்தி சென்றுள்ளனர்.

ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு யுக புருஷர் அவதரித்து யுக தர்மத்தை ரட்சித்து உலகின் குருவாக இருந்து. இந்நாட்டை என்றும் அறத்தில் நிலைநிறுத்தி வந்துள்ளனர்.

அந்த யுக புருஷர்களின் சீரிய வரிசையிலே,

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்''

''உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்''

என்னும் பொய்யா மொழியின் இலக்கியத்திற்கு இலக்கண மாய்த் திகழ்ந்த கருணமூர்த்தி அண்ணல் காந்தியடிகளை உலகம் என்றும் மறவாது. அப்பெருமானது புகழினை, பெருமையினை, அவர் வாழ்ந்த குறிக்கோள் வாழ்க்கையினை எழுத்தில் வடிக்க இயலாது.

இம் மகான் தன் எண்ணம், சொல், செயல் (Creed Word, Deed) இவைகளை சத்தியம் * அகிம்சை என்னும் உரை கற்களில் தீட்டிப்பார்த்து, செயலாற்றி மாசற்ற வாழ்வு வாழ்ந்தார்.

''மனஸ்யேகம் வசஸ்யேகம் கர்மண்யேகம் மஹாத்மனும்!
மனஸ்யன்யத் வசஸ்யன்யத் கர்மண்யன்யத் துராத்மனும் !!''

என்னும் ஆன்றோர் வாக்கின்படி திரிகரணமாகிய மனம், மொழி, மெய்களால் பரிபூரண தூய்மையுடையவராய் விளங்கினார். அவரது பேச்சும் மூச்சும் சத்தியத்தையும் அகிம்சையையும் பறைசாற்றி வந்தன. அவை அவரது இரு கண்கள். அவரை 'மகாத்மா' என்றழைத்தபொழுது அவர் ''நான் அப்பெயருக்குத் தகுதியுடையவனல்லன், நான் ஓர் அல்பாத்மாவே'' ** என்றார். இதிலிருந்து அவரது பணிவும் அடக்கமும் புலனாகின்றன.

---

* [To him (Mahatma Gandhi) Truth meant the integrity of one's creed, word and deed]

** இஸ்லாம் மதத்தைத் தோற்றுவித்த பெருந்தகை முகம்மதுநபி அவர்களை மக்கள் தொழ ஆரம்பித்தவுடன், அவர் தான் ஒரு சாதாரண மனிதன் தான் என்றும், எல்லாம் வல்ல இறைப்பொருள் அல்லாவால் கையாளப்படும் கருவியே (Medium or instrument) என்றும், தன்னையோ தன் உருவத்தையோ தொழக்கூடாது என்றும் கட்டளையிட்டார். அவர் தம் அடக்கமும் பணிவும் ஈண்டு நினைவு கொள்ளத்தக்கது.

அவரது அடக்கம், பணிவு, ஏழைகள் மீது கொண்டிருந்த அன்பு ஆகியவைகளை மற்றுமோர் எடுத்துக்காட்டால் விளக்க லாம். அவரது ஜெயந்தி விழாவைக் கொண்டாடவேண்டும் என்று வந்தவர்களிடத்து ''எனக்குஎதற்கு ஜெயந்தி விழா! இந் தியாவில் பல்லாயிரக்கணக்கான ஏழை எளியவர்கள் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, வாடுகின்றனர். அவர் களுக்கெல்லாம் உணவும் உடையும் கிடைத்து மகிழ்வாக வாழவேண்டும். அவர்களை வாழ வைப்பது, வைக்கக் கூடியது சர்க்கா தான்'' என்று கூறினர். எனவே வந்தவர்கள் காந்தி யடிகளிடம், ''நாங்கள் உங்கள் ஜெயந்தி விழாவைச் 'சர்க்கா' ஜெயந்தியாகக் கொண்டாடுகிறோம்'' என்று கூறினர். இவ் வாறு அடிகளையும் சர்க்காவையும் இரண்டறப் பிரிக்க இயலாத நிலையில் ஏழைகளுக்கென்றே பணிவு, அடக்கம் ஆகியவை களைத் தன்னகத்தே கொண்டு வாழ்ந்தவர் மகாத்மா காந்தி. ஒவ்வோர் ஏழை எளியவர் வீட்டுச் சர்க்காவும் சுழன்று கொண் டிருக்கும்போது 'மகாத்மா', 'மகாத்மா' என ஒலித்துக் கொண்டு அவர் புகழைப் பாடிப் பரப்பிக்கொண்டிருக்கிறது.

அன்று ஈன்ற கன்றின் மீது ஒட்டிக்கொண்டிருக்கும் அழுக் கினைத் தன் நாவினுல் நக்கி, உண்டு தன் கன்றினைத் தூய் மைப்படுத்திவரும் ஆவினம் போல, பாவ மூட்டைகளுடன் வந்து, இறைவன் அருள் வேண்டி நிற்கும் ஒருவனை, இறை வன் மன்னித்து ஆட்கொள்வதுபோல, தரித்திர நாராயணர் களாய், ஏழ்மையில் வாழும் மக்களுடைய சமூக, பொருளாதார ஆன்மீக மேம்பாட்டிற்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு காத்து ரட்சித்த மகான், மகாத்மாஜீ அவர்கள்.

இந்நாட்டைச் சேர்ந்த மக்கள் காசி முதல் இராமேசுவரம் வரை புனித யாத்திரை செய்து, பல புனித நதிகளில் நீராடித் தம்மைத் தூய்மை செய்துகொள்கின்றனர். அவ்வாறு போக இயலாதவர்கள் முருகப் பெருமான் எழுந்தருளி அருள் பாலிக்

கும் அறுபடை வீடுகளுக்குக் சென்று அவனை நினைந்து நினைந்து ஊற்றெழும் கண்ணீர் அதனால் நனைந்து நனைந்து வழிபாடியற்றி தம் ஆன்மாவை ஈடேற்றுகின்றனர்.

''ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும், ''மக்கள் தொண்டே மகேஸ்வரன் தொண்டு'' என்னும் தத்துவங்களின் பேரின்பத்தில் திளைக்கும் பெரியோர்கள் உளர். இத் தத்துவத்தை நிலைநிறுத்துவதற்கு கிராம மக்களின் புனர்வாழ்விற்கு—கிராம ராஜ்யத்தை நிர்மாணிப்பதற்கு—ராமராஜ்யத்தை ஏற்படுத்துவதற்கு—அல்லும் பகலும் அனவரதமும் பாடுபட்டார் அண்ணல் காந்திஜி.

அவர் அவதாரம் செய்த இடமாகிய போர்பந்தர், கல்வி கற்ற இடமாகிய ராஜ்கோட், 1917ல் அவரால் நிறுவப்பட்ட சபர்மதி ஆசிரமம்(இம்மூன்றும் குஜராத் மாநிலத்தில்உள்ளன) 1921ம் ஆண்டு அவரது இலட்சிய வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை உண்டாக்கியதும் முழங்கால் அளவு ஆடை அணியத் தொடங்கிய திருத்தலமாகிய மதுரை, (தமிழ்நாட்டில் உள்ளது) உப்புக் சத்தியாக்கிரகத்திற்காக 1930ல் சபர்மதியிலிருந்து தொடங்கிய தண்டி யாத்திரை செய்த இடம், 1936ஆம் ஆண்டு அவரால் நிறுவப்பட்டு சேவாகிராம ஆசிரமம் உள்ள வார்தா (இவ்விரண்டும் மகாராஷ்ட்ராவில் உள்ளன) 1947-ம் ஆண்டு வகுப்புக் கலவரத்தை அகிம்சாவழியில் தீர்த்து வைப்பதற்காக சமாதான யாத்திரை புரிந்த நவகாளி (பங்களாதேஷில் உள்ளது) ஆகிய ஏழு நினைவு ஸ்தலங்கள் காந்தியடிகளால் புனிதமடைந்தவை. தேசிய ஒருமைப்பாட்டின் சின்னங்களாகவும், வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவையாகவும் உள்ள இவ் வேழு இடங்களைத் தரிசிப்பதற்கு வாய்ப்புப் பெற்றவர்கள் புண்ணியம் செய்தவர்கள்—பாக்கியவான்கள்.

அவ்வாறு வாய்ப்புப்பெற இயலாத மக்கள் கோடிக் கணக்கில் உள்ளனர். அவர்கள் குறைந்தது தமிழ்நாட்டில் உள்ள அண்ணலவர்களின் திருநாமந்தாங்கிய திருச்செங்கோடு காந்தி ஆசிரமம் (சேலம் மாவட்டம்) காந்தி கிராமம் (மதுரை மாவட்டம்) காந்தி மியூஸியம் (மதுரை) ஆகிய மூவிடங்களையும் தரிசிப்பது அவர்களது வாழ்க்கை செம்மைப்பட வழிவகுக்கும். இவைதான் இவண் குறிப்பிடப்பட்டுள்ள '' முப்படை வீடு '' என்று சிறப்பிக்கப்பட்டுள்ள திருத்தலங்களாகும்.

அறுபடை நாயகன் அநீதியின் உருவமாகிய சூரபதுமனை மாய்த்து நீதியை நிலைநாட்டியது போல, மகாத்மாஜீ, மக்கள் இடையே புரையோடிக்கிடந்த வறுமை சாதி சமய வேறுபாடு, இனவெறி, நிறவேறி, தீண்டாமை, மது அருந்துதல், இன்ன பிற தீய சக்திகள் மக்கள் சமூதாயத்தை நலிவுப்பாதையில் கொண்டு செலுத்திக் கொண்டிருப்பதைப் பார்த்தார். அவை களைத் தாங்க ஒண்ணாது எதிர்த்து, அறவழி, அகிம்சை வழி களில் நின்று செயற்கரிய செய்தார். எனவே அவர் திரு நாமந்தாங்கி நின்று, அவர் காட்டிய இலட்சியப் பாதையில் அவர் தம் பணிகளைத் தொடர்ந்து சீராகவும், சிறப்பாகவும் ஆற்றிவரும் இம்மூன்று திருத்தலங்களையும் 'முப்படை வீடு' என்றழைப்பது சாலப் பொருத்தமுடையதாகும்.

இனி ஒவ்வொரு படை வீடாகச் சென்று தரிசிக்கலாம் வாருங்கள் !

காந்தி ஆஸ்ரம் (திருச்செங்கோடு)

அண்ணல் காந்திஜீ, தான் வாழ்ந்து வந்த சபர்மதி ஆசிரமத்தைத் தன் பெயரால் அழைக்காமல் ' ஹரிஜன் அஸ்ரம்' என்றே அழைப்பாராம். அதை மகாத்மா தான் நேசித்த ஹரிஜனின் பெயரிட்டு அழைத்து அலங்கரித்தாற்

போன்று, உலக மூதறிஞருள் ஒருவராகத் திகழ்ந்த உயர்திரு ராஜாஜி அவர்கள் உலகம் நேசித்த அண்ணல் காந்தியின் பெயரால், சேலம் மாவட்டம், திருச்செங்கோட்டிற்கருகில் 6—2—1925ல் ஆசிரமத்தை நிர்மாணித்தார்.

இவ்வாசிரமத்திற்கு திருச்செங்கோட்டிலிருந்து புறப்படும் பேருந்தில் சென்று புதுப்பாளையம் என்னும் இடத்தில் இறங்கி அங்கிருந்து பிரியும் சாலை வழியாகச் சுமார் 3. கி மீ. செல்ல வேண்டும். (அல்லது கரிச்சபாளயம் செல்லும் பேருந்து வண்டியில் ஏறினால் ஷை ஆசிரமத்திலேயே இறங்கலாம்) இவ்வாசிரமம் இன்று சிறு கிராமமாகவே செயல்பட்டு வருகிறது. காந்தியப் பணிகளிலேயே தம்மை முழுவதும் ஈடு படுத்திக் கொண்டுள்ள திருமிகு கௌரி அவர்கள் இதன் செயலாளராக இருந்து செயலாற்றி வருகிறார். அவர்க்குத் துணையாக திரு ஆராவமுதன் போன்ற அன்பர்களுமிருந்து ஆசிரமத்தைத் திறம்பட நடத்தி வருகிறார்கள். அவர்கள் நிஷ்காம்ய கர்மயோகிகளாக இருந்து ஆசிரமப் பணிகளைச் செயலாற்றுகின்றனர். அவர்களனைவரும் நம் பாராட்டுக் குரியவர்கள்.

இந்த வரலாற்றுச்சிறப்புமிக்க ஆசிரமம், தனது 51ஆண்டு சேவையைப் பூர்த்தி செய்து, 52வது ஆண்டு சேவையில் ஈடு பட்டுள்ளது. ஆசிரமத்துவக்க விழாவிற்குத் தந்தை ஈ.வெ.ரா. பெரியார் அவர்கள் தலைமை வகித்தும், கதருக்கு இராஜாஜி அவர்களுடன் சேர்ந்து சேவை செய்ததும் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். இவண் நடைபெற்று வரும் நிர்மாணப் பணி களின் சுருக்கமான செய்திகளாவன:

தொழுநோய் சேவையும் மருத்துவ சேவையும்

தொழுநோயாளிகளுக்குச் சேவை செய்தல் காந்தி அடிகள் செய்த அரும்பணிகளில் மிக முக்கியமான ஒன்றாகும். சமுதாய மக்களால் மிகவும் வெறுத்து ஒதுக்கப்பட்ட தொழு நோயாளர்

களுக்கு காந்தியடிகள் மிகுந்த ஆதரவு அளித்து அன்பு செலுத்திப் பாதுகாத்தார். தன்னுடைய ஆசிரமத்தில் தானே நேரிற்சென்று தொழு நோயாளியினிடத்துக் கண்டுள்ள புண், சீழ் முதலியவைகளைத் தூய்மைப் படுத்தி, மருந்து வைத்துக் கட்டி, அவர்களுக்கு ஆறுதல் கூறினர். அவருடைய நாட் பணிகளில் இதற்கு மிக முக்கியத்துவம் அளித்தார். எனவே அவர் பெயர் தாங்கிய இந்த ஆசிரமத்தில் அவரால் பெரிதும் விரும்பப்பட்ட இச்சேவையைச் செய்வதற்காக ஒரு மருத்துவ மனை, கல்கத்தாவைச் சேர்ந்த பிரபல விஞ்ஞானி, டாக்டர் பி. சி. ரே அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இம்மருத்துவ மனை, இன்றும் மிகச் சிறப்பான முறையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இங்கு பணிபுரியும் மருத்துவர்களும் செவி லியர்களும் பிற மருந்தகங்களில் பணிபுரிவோரைப் போலன்றி தொழு நோயாளிகளிடம் அன்பும் ஆதரவும் காட்டி அவர்கள் உள்ளம் மகிழுமாறு பணிவிடைசெய்து அவர்களைக் குணப் படுத்துகிறுர்கள். இந்நிலையத்தைக் காணும் வாய்ப்புப் பெற்றவர் உண்மையான முறையில் காந்தியம் செயற்படு கிறது என்று எண்ணுவர்.

தீண்டாமை ஒழிப்பு

இந்தியாவில் தீண்டாமை என்னும் கொடுமை ஒழியப் பாடுபட்டவர்களில் காந்திஜீ மிக முக்கியமான இடத்தைப் பெறுகிறுர். அவர்களை 'ஹரிஜன்' (ஹரி-திருமால், ஜன்-மக் கள்) என்று பெயரிட்டு அழைத்தார். "அவர்கள் சுதந்திரத் துடன் வாழ்ந்தால் தான் நாடு உண்மையிலேயே முன்னேற் றம் அடைந்துள்ளது என்று கூறுவேன்" என்ருர். எனவே தான் நிறுவிய சபர்மதி, வார்தா முதலிய ஆசிரமங்களில் தீண் டத் தகாதவர்கள் என்று வெறுக்கப்பட்டவர்களை அழைத்து அவர்களுக்கு ஆதரவு அளித்தார். எனவே அவரது நிர்மாணப்

பணிகளில் மற்ெரு முக்கியம் வாய்ந்த இத் தீண்டாமை ஒழிப்பிற்கும் இவ்வாசிரமம் இன்றும் அரிய பணிகளைச் செய்து வருகிறது.

இப்பணிக்காக ஆசிரமம் இதுவரை 5·11 லட்சம் ரூபாய் செலவிட்டுள்ளது· ஆசிரமம் துவங்குகையில், இராஜாஜி அவர்கள், ஹரிஜன வாலிபர்களை ஆசிரம வாசிகளாகச் சேர்த்துக் கொண்டு அவர்களுடன் சமபந்தி போஜனம் செய்ததைக் கிராம மக்கள் ஆயிரக்கணக்கில் வண்டிகளில் ஏறிப் பயணம் செய்து வந்து பார்த்து அதிசயித்த காலம் ஒன்று இருந்தது.

மதுவிலக்கு

ஒழுக்க கேடுகளில் கள், கொலை, காமம், களவு, பொய், என்பன ஐந்து பெரும் பாதகங்களாகக் கருதப்படுகின்றன. ஐம்பெரும் பாதகங்களில் முதன்மையானதாகக் 'கள்' சொல்லப்பட்டுள்ளது. கள்ளை உண்டு அவதிப்படும் ஆயிரக்கணக்கான ஏழை எளியவர்கள் படும் துன்பத்தைக் கண்டார். எனவே மது நாட்டிலிருக்கின்றவரை ஏழை மக்கள் முன்னேற முடியாது என்று கருதினர். எனவே கள்ளுக்கடை அடைக்கச் சத்தியாக்கிரகத்தை மேற்கொண்டார். அவர் 'கலாலும் கல்வியும்' என்னுந் தலைப்பில் இம்மதுவை மிக அதிகமாகச் சாடுகிருர். 'நான் 24 மணி நேரம் சர்வாதிகாரியானல் இந்நாட்டிலுள்ள பனை மரங்கள் அனைத்தையும் நீக்கி விடுவேன் என்று கூறியுள்ளார்· எனவே அவரால் பெரிதும் வெறுத்தொதுக்கப்பட்ட இம்மதுவை ஒழிக்க இவவாசிரமம் பெரிதும் பாடுபட்டுள்ளது; இன்றும் பாடுபடுகிறது.

இராஜாஜி அவர்கள், சேலம் நகராட்சித் தலைவராகப் பணி புரிகையில், நகராட்சி எல்லைக்குள் இருந்த மதுக் கடைகளை மூடச் செய்தார். ஆசிரமத்தைச் சுற்றியிருந்த 31 மதுக் கடைகளை மக்கள் மனமாற்றத்தைக் கொண்டே மூடச் செய்தனர்.

கதர்ப்பணி

சுய சார்பு, சுயதேவைப் பூர்த்தி, சுதேசி ஆகியவை களை அமுல்படுத்தக் கதரைக் காந்தி அடிகள் நமக்குத் தந் தார். கதருக்குப்பின் பெரிய தத்துவத்தையே கொடுத்தார் காந்தியடிகள். கிராமக் கைத்தொழில்வளர அரிய பணியாகக் கொடுத்தார் கதர் தத்துவத்தை. பரவல் முறைப் பொருளா தாரத்திற்கு (Perenial Economy) இக் கதர்த் தத்துவம் எடுத் துக்காட்டாக உள்ளது. ஏழைக்கென்று கொண்டு வரப்பட்ட கதர்த் தத்துவம் மிகச் சீரிய முறையில் செயல்படுகிறது. இவ் வுலகைத் துறந்த துறவிகளுக்குக் காவி ஆடை எவ்வளவு இன்றியமையாததோ அதைப் போன்று கதராடை இவ்வுலக மக்களுடன் இருந்து அவர்களுக்குத் தொண்டு செய்வோர் அணியும் புனித ஆடையாக உள்ளது. இத்தகு புனிதம் வாய்ந்த கதர்ப்பணியை இன்றும் இவ்வாசிரமம் மிகச் சிறப் பான முறையில் செயலாற்றி வருகிறது. இப்பணி மூலம் பல் லாயிரக்கணக்கான ஏழை எளியவர்க்கு வேலை வாய்ப்பை அளித்துக் கொண்டு இருக்கிறது. எனவே வேலையில்லாத் திண் டாட்டமும் இதன் மூலம் குறைக்கப்பட்டுள்ளது. இவ்வாசிரமம் 1925 முதல் 1976 வரை கதர்ப்பணி மூலம் இப் பகுதியிலுள்ள ஏழை மக்களுக்கு ஒரு கோடியே எண்பத்திரண்டு லட்சம் ரூபாய் வருமானம் கிடைக்க உதவியுள்ளது. பொருளா தாரத் துறையில் சிறந்த பணியினை இதன்மூலம் இவ்வாசிரமம் செய்து வருவது மிகவும் பாராட்டந் தகுந்த ஒன்றாகும்.

மேலும் கைக்குத்தலரிசி தயாரித்தல், தேன் சேகரித்தல், சுண்ணாம்பு உற்பத்தி, சோப் உற்பத்தி, காலணி, தோல் பொருட்கள் தயாரித்தல் இன்னும் பிற கிராமக் கைத்தொழில் களைப் பேணும் பணிகளில் ஆசிரமம் ஈடுபட்டுள்ளது.

இராஜாஜி அவர்கள் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இப் புனித தலத்தில் பத்து ஆண்டுகள் தங்கி ஏழை எளிய ஹரிஜன மக்களின் உயர்விற்காகத் தன்னையே அர்ப்பணித்துக்கொண்டு செயல்பட்டார். அவர் தங்கியிருந்த சிறிய அறை, பயன்படுத்திய பொருட்கள், புத்தகங்கள் ஆகியவைகளை நேரில் காணும் பொழுது உள்ளம் புளகாங்கிதம் கொள்கிறது.

இராஜாஜி அவர்களின் திருவுருவச்சிலை தாங்கிய நினைவாலயம் உள்ளத்தை உருக்கும் வண்ணம் உள்ளது. அவ்வுருவத்தை உற்றுப் பார்த்துக்கொண்டு ஒரு நிமிடம் நின்ருல் ''ஏன் என்னையே உற்றுப் பார்க்கிருய்; உனது இருப்பிடத்திற்குச் செல்; நான் வாழ்ந்த வாழ்க்கைப்பாதையை லட்சியத்தை மையமாகக் கொண்டு ஆக்கப் பணியில் ஈடுபடு; இலட்சிய வேட்கை கொண்டவனுக இரு. வ்யக்தபக்தியுடன் (Hero worship) இருப்பது சரியன்று. கொள்கை வீரனுக மாறு, செயல் வீரனுகத் திரும்பிச் செல்'' எனப்பேசாமல் பேசுவதுபோல் தோன்றுகிறது.

உலகமே தலைவணங்கத்தக்க பேராற்றலும், எளிமையும், அடக்கமும், மேதாவிலாசமும் ஒருங்கே அமையப்பெற்ற இராஜாஜி அவர்களைச் சந்தித்து அரசியல். பொருளாதார, சமுதாய முன்னேற்றத்திற்கான, மந்திராலோசனைகளை மேற்கொள்ள, ஆசிரமத்தைத் தேடியும் நாடியும் வந்து வரலாற்றைப் படைத்த மாமேதைகளும், அறிஞர்களும் பலர். அவர்களுள்,

மகாத்மா காந்தி	19-7-1915, 21-3-1925 (முதன் முறை)
மகாத்மா காந்தி	12-2-1934, 14-2-1934 (இரண்டாவது முறை)
டாக்டர் ராஜன் பாபு	24-5-1927, 25-5-1627

சர்தார்வல்லபாய் படேல்	30 ஆகஸ்ட் 1929
கஸ்தூரிபாய் காந்தி	18 டிசம்பர் 1932
ஜவஹர்லால் நேரு	11 அக்டோபர் 1936
எஸ். சத்தியமூர்த்தி	11 அக்டோபர், 1936
கே. காமராஜ்	1—8—62, 9—2—1975

முக்கியமாகக் குறிப்பிடத்தகுத்தவர்களாவர்.

இவ்வாறு அனைத்து விதங்களிலும் புனிதம் வாய்ந்த இவ்வாசிரமத்தைப் பார்க்கவும், அங்கு தங்கவும் உணவருந்தவும் அன்பும் பண்பும் நிறைந்த திரு ஆராவமுதன் போன்ற ஆசிரம நிர்வாகிகளுடன் பழகவும், பாக்கியம் பெற்ற நாம் கிடைத்தற்கரிய பேரின்பத்தை அடைந்தோராக உணர்கின்ருேம். ''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்றவாறு அனைவரும் இவ்வாசிரமத்திற்குச் சென்று அங்கு நடைபெறும் பணிகளைக் கண்டு இன்பம் எய்திவர வேண்டுகிறேன்.

இரண்டாவது படை வீட்டைத் தரிசிப்போம் வாருங்கள்!

காந்தி கிராமம்

மதுரையிலிருந்து திண்டுக்கல் செல்லும் வழியில் சுமார் 4·9 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. (அருகில் உள்ள இரயில்வே நிலையம் அம்பாத்துறை)

அன்னியர் ஆட்சியில் பலநூறு ஆண்டுகளாக அடிமைப் பட்டுக் கிடந்த நமது நாடு, அரசியல் சுதந்திரம் பெற்ற நன்ளைாம், ஆகஸ்ட் 15, 1947ல் காந்தியடிகளின் ஆசியுடன் துவங்கப்பட்டது. நாட்டு மக்களுக்குப் பொருளாதாரம், சமூகம். ஏனைய அனைத்துச் சுதந்திரம் ஏற்படப் பணியாற்றும் இம்மாபெரும் ஸ்தாபனம் ''எங்கே சத்தியம் ஆட்சிபுரியின்

றதோ அங்கே வெற்றி நிற்கும்'' என்னும் அண்ணலின் ஆசிச் செய்தியுடன் தோன்றியது. அறுபத்தைந்து மாணக்கர் ஆசிரியர்களுடன் தொடங்கிய இன்று ஆல்போல் தழைத்து மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மாணக்கர்களையும் ஆசிரியர்களையும் கொண்டு பெரிய நிறுவனமாக இயங்கி வருகிறது. இந்நிறுவனத்தின் இயக்குநர் அன்பு மாமா திரு. இராமச்சந்திரன் அம்மா திருமதி. டாக்டர் சௌந்திரம் அவர்களின் அயரா உழைப்பினுலும் இடைவிடா முயற்சியாலும் இந்நிறுவனம் இன்று ஒரு பல்கலைக் கழகமாக உருவெடுத்துள்ளது. அதன் துணை வேந்தராக அன்பு மாமா அவர்களே நியமிக்கப்பட்டுள்ளார். துணைவேந்தர் பதவி அவரால் இன்று பொலிவுறுகிறது என்ருல் அது மிகையாகாது. வெறும் பட்டதாரிகளை உருவாக்கி விடும் மற்றைய பல்கலைக்கழகம் போலன்றி இந்தியாவின் உயிர் நாடி யாக விளங்கும் கிராமங்களின் முன்னேற்றத்திற்கான கல்வியும் உழைப்புடன் கூடிய கல்வி, வேலைவாய்ப்புத்தரவல்ல கல்வி, சுயதேவைப்பூர்த்தி செய்துகொள்ளும் கல்வி ஆகியவைகளைப் போதிக்கும் ஒரு கிராமியப் பல்கலைக்கழகமரக உள்ளது. இப்பல்கலைக்கழகம் மத்திய அரசின் நேரடிப் பார்வையில் இயங்கும். இதன் வேந்தராக (Chanceller)த் திருமிகு கஜேந்திர கட்கர் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். துணைவேந்தர் திருமிகு அன்புமாமா இராமச்சந்திரன், அம்மா சௌந்திரம் ராமச்சந்திரன், நமது அன்பிற்குரிய பாரதப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி ஆகிய மூவரும் 'முப்படை வீடு' நூலின் முகப்பில் முன்னிற்பவர்.

மகாத்மாஜீ கூறியது போல, 'தொட்டில் முதல் சுடுகாடு வரை' கிராம சமூகத்தினருக்குத் தொண்டு புரிவதே எமது லட்சியம்'' கிராம சமூகத்தினருக்கு பல்வேறு துறைகளிலும் பணியாற்றுகின்ற ஊழியர்களை உருவாக்கும் பணியில் காந்தி கிராமம் ஈடுபட்டுள்ளது.

இங்கு செயல்படும் முக்கிய நிறுவனங்களாவன :

குழந்தைகள் இல்லம் : 'மகிழ்ச்சியும், வளமும்' என்னும் பொருள் கொண்ட ''சௌபாக்கியம்'' என்னும் பெயர் தாங்கிய குழந்தைகள் இல்லத்தைக் கண்டோர் மகிழ்வர், கண்கலங்குவர். அவரவர் மனோ நிலைக்கும், கண்ணோட்டத்திற்கும் ஏற்ப இவ்வில்லம் மகிழ்ச்சி, துயரம் தர வல்லது. (இதை அனுபவித்தோரே அறிவர்.)

7—10—1947ல் மூன்று குழந்தைகளுடன் தொடங்கப்பட்ட இவ்வில்லம் தாய் தந்தையரின் அன்பும் ஆதரவும் பெறாத 98 சிறுவர்களையும் 145 சிறுமிகளையும் கொண்டதாக இன்று விளங்குகிறது.

இந்த இல்லத்தில் பொறுப்பாளராகிய அருள் வடிவான அம்மூதாட்டி ஒருவர் கூறிய செய்தியாவது :

அங்கிருந்த ஒரு பச்சிளங் குழந்தையைக் காண்பித்து ''இதோ இந்தப் பெண் குழந்தையை யாரோ இரண்டு நாட்களுக்கு முன்பு இந்த இடத்தில் போட்டுவிட்டுச் சென்றுவிட்டனர். யாரென்றே தெரியவில்லை. இதை எடுத்து வளர்க்கிறோம். (நினைக்கவே கண் கலங்குகின்றது.)

இப்பேர்ப்பட்ட துர்பாக்கியவதிகளையெல்லாம் சௌபாக்கியவதிகளாக வளர்த்து, மணமுடித்துவைத்து, பெற்றோர் தன் குழந்தைகளுக்குச் செய்யும் அனைத்து கடமைச் செயல்முறைகளையும் செவ்வனே செய்துவரும் பாங்கு நெஞ்சை நெகிழ்விக்கின்றன.

ஔவை கிராம மருத்துவ நிலையம் :

1943-ல் பாப்பஞ்சேரியில் (அடையார்-சென்னை) தொடங்கப்பட்ட இந்நிலையம் 1947-ல் சின்னாளப்பட்டிக்கு (காந்தி

கிராமப்பகுதி) மாற்றப்பட்டது. 1952-ல் 22 படுக்கைகளும் 6 துணைக்கேந்திரங்களும் இருந்தன. இன்று நூற்று நாற்பது படுக்கைகளைக் கொண்டதாக வளர்ந்துள்ளது.

அலுவலகங்களில் பணியாற்றும் ஓர் அம்மையாருக்கு ஓரிரு வாரங்கள் அலுவல் காரணமாகத் தம், கணவனையும், குழந்தைகளையும் பிரிய நேரிட்டால், தனது குழந்தையின் நடை போல, அல்லது குரல்போல பிறிதொரு குழந்தையின் நடையைக் கண்டாலோ. அல்லது குரலைக் கேட்டாலோ அப் பெண்மணிக்குத் தன் குழந்தையின் நினைவு வந்துவிடுவது இயற்கை. அக்குழந்தையை வாரி அணைத்து முத்தமிட்டு, தின் பண்டங்கள் கொடுத்து மகிழ்ந்தால் ஓரளவு குழந்தையின் பிரிவுச் சோகம் தணியும்.

ஔவை மருத்துவ நிலையத்தில் அங்க ஹீனமுள்ள ஓர் ஆண் குழந்தை வளர்கிறான். அவனை வெளிநாடு அனுப்பி சிகிச்சை அளித்து குணப்படுத்தத் திட்டம் உள்ளதாக அந்தப் பிரிவில் பணியாற்றும் அம்மையார் கூறக்கேட்டோம்.

அப்பையனைப் பார்த்து வந்த அம்மையார், ''டேய் முரளி மாமாக்கள் வந்திருக்காங்க, குட்மார்னிங் சொல்லு'', என்றதும் அதே பெயர் உடைய எனது மகன் முரளியின் நினைவு வந்தது. என் கவனம் சிறிது சிதறியது முரளிக்கா இந்நிலை...... என்று கலங்கிய மனமுடன் அவ்விடத்தைவிட்டு ஏகினோம்.

கஸ்தூரி சேவிகாஸ்ரமம் :

1948-ல் 12 பெண்களுடன் துவங்கியது தற்போதைய எண்ணிக்கை சுமார் 77 ஆகும். விதவைகள், கைவிடப்பட்ட மனைவிகள், சமூகத்தில் துர்ப்பாக்கிய நிலையில் உள்ள பெண் டிர் இதில் சேர்க்கப்பட்டுப் பின்னர், 8-ஆம் வகுப்பு, எஸ்.எஸ்,

எல். சி. தேர்வுகளுக்குப்பின் ஆசிரியை, நர்ஸுகள், மருத்துவப் பெண்டிர், தொழிலாசிரியைகளாகப் பணிபுரிகின்றனர்·

இதர கல்வி நிலையங்கள் :

இவை தவிர, தொடக்க, ஆதார, உயர்நிலைப்பள்ளிகள். கிராமக்கல்வி நிலையம், மூன்ருண்டு டிப்ளமா படிப்பு, வேளாண்மை விஞ்ஞானத்தில் சான்றிதழ் இரண்டாண்டுப் படிப்பு; பயிற்சிப் பள்ளிகள், பயிற்சிக் கல்லூரி, செவிலியர் பயிற்சி முதலியவை வளர்பிறை போல வளர்ந்து வருகின்றன.

கிராம மறுவாழ்வுப்பணி :

8 5—76-ந்தேதி முற்பகல் 9-30 மணியளவில் நமது குழுவினர் திரு.நாகராஜன் அவர்கள் வழிகாட்டிட காந்தி கிராமம், கிராமபுணருத்தாரணப் பணிக்காக, ஏற்றுக் கொண்டிருக்கும் சுமார் 21 கிராமங்களில் பரிசோதனைக்காக இரண்டு கிராமங்களைப் பார்வையிடச் சென்ருேம்.

செட்டியப்பட்டி :

இக்கிராமத்தில் உள்ள பாலர் பள்ளி (Balwadi) ஐப் பார்வையிட்டோம். சீனியர் குழந்தைகள் சிறுவர் 7, சிறுமியர் 10-ம், ஜுனியர் குழந்தைகள் 23ம் படித்து வந்தனர். பயிற்சி பெற்ற இரண்டு ஆசிரிய சகோதரிகள் இன்முகத்துடன் வரவேற்று பள்ளி விபரங்களையும் நடைமுறை பற்றியும் தெளிவாக விளக்கினுர்கள். (கௌண்டர்கள்) வாழும் இப்பகுதியில் காலணி செய்வோர் குடியிருப்பைச்(Cobber's Colony)சென்று பார்வையிட்டோம். அவர்களுக்கு காந்தி கிராம நிதியிலிருந்து ஓட்டு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

வலையப்பட்டி

இயற்கையில் எழில் கொஞ்சும் சிறுமலை அடிவாரத்தில் அமைந்துள்ள இந்தச் சிற்றூரில் வலைஞர் பெருமக்கள் வாழ்

கிருர்கள். இங்குள்ள பாலர் பள்ளியில் 2 முதல் 5 வயதுவரையுள்ள குழந்தைகள் முப்பது பேர் படித்து வருகிருர்கள். ஆசிரிய சகோதரி அன்னகாமு அவர்கள் பள்ளிப் புள்ளி விவரத்தை விளக்கிஞர்கள்.

இந்த இரண்டு கிராமங்களைக் காணும்பொழுது நம்மில் பலருக்கு இந்த 1976 ஆம் ஆண்டில் இவ்வளவு பிற்போக்கான நிலைமையில் உள்ள கிராமங்கள் நமக்கு அருகாமையிலேயே இருக்கின்றனவே! இவைகளை எல்லாம் 'மகாத்மாஜீயின் கனவின்படி எப்படி நாம் முன்னேற்றுவது, வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது, கிராம ராஜ்யம்–இராம ராஜ்யம் ஏற்படுத்துவது என்னும் ஏக்கமும், தயக்கமும் வராமலில்லை. அவ்வளவு பின் தங்கிய மக்கள் இங்கு தமது வாழ்க்கையை நாம் கற்பனை செய்து பார்க்க இயலாத சூழ்நிலையில் நடத்தி வருகிருர்கள். அவைகளை எல்லாம் திருமிகு நாகராஜன் அவர்கள் விளக்கியபொழுது உருக்கமாகவே இருந்தன.

அன்னபூர்ணுபந்தல்

காந்திஜீ ஒழுக்கத்தின் பிழம்பாகவே வாழ்ந்தார். வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு அடிப்படைத்தேவை ஒழுக்கம் தான் என்பதை காந்திஜீ நன்கு உணர்ந்திருந்தார். வள்ளுவர்

''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு''

என கல்வியைக் கண்களுக்கு ஒப்பிட்டுக் கூறிஞர். ஆனல் ஒழுக்கத்தை

''ஒழுக்கம் விழுப்பந்தரலா னெழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.''

என்று உயிரை விடச் சிறந்ததாக விளக்கிஞர்.

கண் இல்லாதவன்-கெட்டவன்-பார்வையிழந்தவன்
இருக்கலாம்-வாழலாம்-

உயிர் இல்லாதவன் . . . . , .

இதைத்தான் ஆங்கிலப்பழமொழி

If Wealth is lost nothing is lost
If Health is lost something is lost.
If Character is lost everything is lost.

என்று விளக்குகின்றது.

அந்த ஒழுக்கத்தை வளர்ப்பதற்கு பேணிக் காப்பதற்கு- தெய்வ பக்தி - பிரார்த்தனை துணை செய்கின்றது என்பதைக் காந்திஜீ திண்ணமாகத் திட்டவட்டமாக உணர்ந்திருந்தார்.

எனவே மகாத்மாஜீ, ''உணவு இன்றி என்னால் பல நாட்கள் உயிர் வாழ முடியும்; ஆனால் பிரார்த்தனை இன்றி ஒரு நாளும் வாழ முடியாது'' என்றார். ஆத்ம சுத்தி-உள்ளத் தூய்மையை ஏற்படுத்தும் பிரார்த்தனையின் சிறப்பை உணர்ந்த இந் நிலையத்தில் 'சர்வ சமய பிரார்த்தனை' நடைபெறுகிறது. ஒரு முறையாவது காந்தி கிராமத்தில் நடைபெறும் சர்வசமய பிரார்த்தனையில் கலந்து கொண்டு மன அமைதி, மண நிறைவு கொள்ளல் வேண்டும்''. என்று அதனை அனுபவித்த பல சான்றோர் கூறக்கேட்ட எனக்கு அந்தப் பாக்கியம் இன்னும் கிடைக்கவில்லை என்னும் ஏக்கம் ஏற்படாமலில்லை. விரைவில் கிடைக்க இறைவன் துணை நிற்பான் என நம்புகிறேன். வரலாற்றைப் படைத்த அரும்பெரும் தலைவர்கள், ஞானிகள், யோகிகள் இப் பிரார்த்தனையில் கலந்து கொண்டு பேரின்பம் அடைந்துள்ளார்கள்.

ஆசி தந்த ஆன்றோர்களும், சான்றோர்களும்

காந்தி கிராமத்திற்கு எழுந்தருளி, காந்தியின் கொள்கைகள், செயலாக்கப்பட்டுவரும் நிர்மாணப் பணிகளைப் பார்வையிட்டு, ஆசி வழங்கிய உலகப் புகழ்பெற்ற தலைவர்களுள்

குறிப்பிடத்தக்கவர்களில் சிலர் வருமாறு:- டாக்டர் ராஜேந்திர பிரசாத். பண்டிட் ஜவஹர்லால் நேரு, திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண், திரு ஆச்சார்ய வினேபா பாவே, திரு. மார்ட்டின் லூதர்கிங், டாக்டர். எஸ். ராதாகிருஷ்ணன், திரு & திருமதி செஸ்டர் பௌல்ஸ், திருமதி இந்திரா காந்தி. டாக்டர் ஜாகிர் ஹுசேன். ஸர் ஸி. பி. ராமசாமி அய்யர், திரு. கே, காமராஜ் திரு. சி. ராஜகோபாலாச்சாரி, திரு. மொரார்ஜிபாய் தேசாய், திரு ஈ. வி. ராமசாமி, திருமுருக கிருபானந்தவாரியார், திரு. காகா சாகேப் கலேல்கர் மற்றும் மாநில, மத்திய அமைச்சர்கள் பலர்.

சிவசைலம் ஔவை ஆஸ்ரமம்

எழில்மிக்க மேற்கு மலைத் தொடர்ச்சியிலே மூன்று திருத் தலங்கள் உள்ளன. பொதிகை மலைச் சாரலில், தாமிரபரணி நதிக் கரையில் அகத்தியர் முதலிய முனிவர்கள் வசித்த ஸ்தலம் பாபநாசம் என்னும் யோக பீடம். திரிகூட பர்வதத்தில் சித்திரா நதி தீரத்தில் அழகிய பல அருவிகள் நிறைந்த திருக் குற்றலம் ஸ்தலம் சித்தர்கூடம். இரண்டிற்கும் நடுவில் வள மிக்க கருண நதிக்கரையில் ஸ்ரீ அத்ரி மகரிஷி முதலானேர் வசித்த ஸ்தலமாகிய சிவசைலம் அமைந்துள்ளது. இங்கு ஸ்ரீ பரம கல்யாணி சமேத ஸ்ரீசிவசைல நாதர் அருள் மழை பொழிந்து கொண்டிருக்கிருர்.

திருநெல்வேலி மாவட்டத்தில்—அம்பாசமுத்திரம் வட்டத் தில் ஆழ்வார் குறிச்சியிலிருந்து சுமார்மூன்று கல் தொலைவில் சிவசைலம் அமைந்துள்ளது. (இத்திருத்தலம் பற்றிக் கேள்வி யுற்றபோது என்று காணப் போகிறேனே என ஏக்கத்துடன் இருந்த எனக்கு இறையருளும் குருவருளும் துணை நின்று 27—7—76ந் தேதி காணும் பாக்கியம் பெற்றேன்.)

ஸ்ரீமான் ஸ்ரீ G. ராமச்சந்திரன் அவர்களால் துவக்கப் பெற்ற காந்தி கிராமம் அளவிலே மிகப் பெரிய ஸ்தாபனம். துவக்கத்திலே பெரும்பாலும் பெண்கள் ஸ்தாபனமாக இருந் தது. நாளடைவில் அது ஆண், பெண். குழந்தைகள் பிரிவி னருக்கு உரிய ஸ்தாபனமாக மாறிவிட்டது. ஒருவேளை, டாக் டர் திருமதி சௌந்திரம் ராமச்சந்திரன் அவர்கள் காந்தி கிரா மம் ஒரு பெண்கள், குழந்தைகள் ஸ்தாபனமாகத் திகழவேண் டும் என்று தொடங்கிய கனவு நிறைவேருததால் தானோ என் னவோ ஔவை ஆசிரமத்தைத் தனி பெண்கள் ஸ்தாபனமாக நிறுவினுர்கள். இன்றும் இது மகளிர் நடத்தும் ஸ்தாபன மாகவே திகழ்ந்து வருகிறது. நைந்த உள்ளங்கள், தளிர்ந்த கரங்கள், நொந்த மனங்கள்- வெம்பிய வாழ்வினர் தங்கள் தங்கள் வாழ்வு செம்மையுற, சீர்படுத்திக் கொள்ளப் பயன் படும் ஒரு நிலையமாக வளர்ந்திருக்கிறது.

சிவசைலத்திலுள்ள ஔவை ஆஸ்ரமம் உண்மையிலேயே காந்திக் கிராமத்தின் செல்வமகள். இயற்கை அன்னையின் மடியிலே தவழும் குழந்தை. காந்தி கிராமத்தின் ஒரு கிளை ஸ்தாபனம்.

பட்டணச் சூழ்நிலையிலிருந்து மிகவும் விலகி அமைதியான கிராமச் சூழ்நிலையில் உள்ள இந்த ஆசிரமம் மேன்மையான முறையில் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு டாக்டர் திருமதி சௌந்திரம் ராமச்சந்திரன் அவர் களின் தீர்க்கதரிசனமும், தளரா முயற்சியுமே காரணம். தெய் வத்திருவருளும், எல்லோருடைய அயரா ஒத்துழைப்பும் இந்த ஆசிரமத்தையும் சகஸ்தாபனங்களையும் மேலும் மேலும் வளர்ந் தோங்கச் செய்கின்றன.

முன்பு குறிப்பிட்டது போல, காந்தி கிராமம். முதிர்ச்சி அடைந்த ஓர் ஸ்தாபனம். பெரியவர்கள் பெரும்பாலும் தான் பெற்றெடுத்த மக்களைக் காட்டிலும் தங்கள் குழந்தைகளுக்குப் பிறந்த பேரன், பேத்திகளிடம் அன்பும், கனிவும், பரிவும் காட்டுவது இயற்கை. கிராம நலப் பணியிலும், குறிப்பாக மாதர் குலத்திற்குச் செய்த அரும்பெரும் தொண்டினைப் பாராட்டி, 1962 ஆம் ஆண்டிலேயே ஜனாதிபதி அவர்களால் ''பத்மபூஷண்''விருதளிக்கப்பெற்ற பார் புகழ் டாக்டர் திருமதி சௌந்திரம் ராமச்சந்திரன் அவர்கள் இதற்கு விதிவிலக்கல்ல. அந்தத் தாயுள்ளம் எப்பொழுதும் ஔவை ஆசிரமத்தை தனிப் பரிவுடன் நினைத்த வண்ணமாக இருக்கும். அந்நாளிலே இயற்கையிலும், தெய்வத் திருக்கோயில்களிலும், கிராமச் சூழ் நிலையிலும் ஈடுபாடு அதிகம். பெண்கள் கல்வியே நமது நாட்டிற்கு முதுகெலும்பு என்பது அம்மாவின் அசையாத நம்பிக்கை. இதன் பயனாக உருவாகியதே ஔவை ஆசிரமம். [அவ்வளவு சிறப்புப் படைத்த இந்த ஔவை ஆசிரமத்தில் அடியேன் அம்மையாரைத் தரிசிக்கவும், ஆசிபெறவும் வாய்ப்புப் பெற்றேன் (27 – 7 – 76) என்பதை எழுத எண்ணம் பூரிக்கின்றது.]

சிறுவயதிலிருந்தே அம்மையார் அவர்களுக்கு நம் தமிழ் மூதாட்டியும், கல்வியில் சிறந்தவரும், மன உறுதியுடையோருமாகிய ஔவையிடம் ஆழ்ந்த பக்தி உண்டு. எனவே தான், தான் பிறந்த நெல்லை மாவட்டத்தில் தனது பணியில் ஒரு விதையை, ஔவையின் பெயரால் விதைத்து, வளர்க்கவிரும்பி ஔவை ஆசிரமத்தினை பொருத்தமான இடமாகிய சிவசைலத்தில் 1954 ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் பௌர்ணமி நன்னாளன்று ஆரம்பித்து வைத்தார்கள்.

1. சேவிகாஸ்ரமம்

சிவசைலத்தில் அருளாளரும். பணியாளருமாக விளங்கும் ஸ்ரீ மான் நல்லசிவம் பிள்ளையவர்களால் அன்புடன் வழங்கப்

பட்ட இல்லத்தில் 1954 ஆம் ஆண்டு ஔவை ஆசிரமம் ஸ்ரீ எம். பக்தவத்சலம் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

கிராமங்களில் உள்ள விதவைகள், திக்கற்ற பெண்கள் போன்றோருக்கு போதுமான கல்வியைக் கொடுத்து அவர்களை ஆசிரியராகவோ, பலவிதக் கைத்தொழில்கள், மருத்துவம் இவற்றில் பயிற்சி பெற்றவராகவோ ஆக்குவது இதன் லட்சிய மாகும். நல்ல சூழ்நிலையில் தெய்வபக்தியும் ஒழுக்கமும் வளரும் போதுதான் சேவையில் மணம் கமழும்.

இதுவரை இங்கு பயிற்சி பெற்ற மாணவிகள் சுமார் 760 பேர். இவ்வாண்டு ஆசிரமத்தில் சேர்க்கப்பட்டவர்கள் 365 மாணவியர். இந்நிறுவனத்தின் காரியதரிசி, அன்பு, அடக்கம், தியாகம் ஆகியவற்றின் மொத்த உருவமாக விளங்கும் திருமதி ஜி. அன்னபூர்ணா அவர்கள் ஆவார்கள்.

2, டி. வி. எஸ். லட்சுமி ஆசிரியை பயிற்சி நிலையம்

இப்பயிற்சி நிலையம் 1960 ஜூலைமாதம்துவக்கப்பெற்றது. இளநிலை ஆசிரியைப் பயிற்சியில் 300 மாணவிகளும், முதுநிலை ஆசிரியைப் பயிற்சியில் 289 பேரும் பயிற்சி முடித்துச் சென்று உள்ளனர். இதன் தலைமை ஆசிரியை செல்வி இரா. சுந்தரி அவர்கள்.

3. *முன்னிலை ஆசிரியை பயிற்சிப் பள்ளி*

மகாத்மா காந்தியடிகள், கஸ்தூரிபா காந்தி நினைவு நிதி யின் தமிழ்நாட்டுப் பொறுப்பை டாக்டர் சௌந்திரம் அம்மை யாரிடம் 1946, ஏப்ரல் மாதம் ஒப்படைத்தார்கள். இத்துணை சிறப்புமிக்க அம்மையார் ஆசியுடன், 1947ல் காந்தி கிராமத்தில் தொடங்கி நடைபெற்று வந்த இந்தப் பூர்வாதார ஆசிரியைத் பயிற்சிப் பள்ளி 1973, ஆகஸ்ட், 17ல் தமிழக அரசின் அனுமதியுடன், ஔவை ஆசிரமத்தில் தம் பணியினைத் தொடங்கியது. 30 மாணாக்கியர் இதில் பயிற்சி

பெறுகின்றனர். இதற்கும் தலைமை ஆசிரியை செல்வி இரா. சுந்தரி அவர்களே.

4. **பாலர் பள்ளிகள்**

பால்வாடி என்றழைக்கப்படும் எல்.கே.ஜி., யூ.கே.ஜி. உள்ள நர்ஸரிப் பள்ளிகள். சிவசைலத்தைச் சுற்றியுள்ள, கல்யாணபுரம், ஆழ்வார்குறிச்சி, சம்மன்குளம், இரவணசமுத்திரம் ஆகிய ஊர்களில் செல்வனே நடைபெற்று வருகின்றன.

5. **அத்ரி கலா நிலையம்**

நம் பாரத நாட்டை, அனாதி காலம் முதல் இந்நாள் வரை ஏற்றத்தையும், பெருமையையும் கொடுத்து, உலக குருவாக விளங்க வைக்கும் தவமுனிகளின் வரிசையிலே அத்ரி மகரிஷியின் திருநாமத்தால் விளங்கும் நடுநிலைப்பள்ளி ஒன்றுள்ளது. 1932ல் தொடங்கிய இப்பள்ளியில் 195 சிறுவர் 137 சிறுமியர், 9 ஆசிரியர்கள், 4 ஆசிரியைகள் உள்ளனர். இதன் தலைமை ஆசிரியர் திரு ஐ. ஜேக்கப் அவர்கள். பாலர் வகுப்புகளும் (Pre-Primary Classes) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

6. **காந்தி கிராம - சாந்தி - காது கேளாதோர் பள்ளி :**

கல்யாணிபுரத்தில் உள்ள இப்பள்ளியில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த வாய்பேசாத, காது கேளாத, 25 சிறுவர்கள் பயில்கின்றனர். உணவு, உடை, இருப்பிடம் இலவசமாகும். (அன்புள்ளம் கொண்டவர்கள், இந்நிலையில் உள்ள அனுதாபத்திற்குரிய குழந்தைகளைக் கண்டால் இப்பள்ளியில் சேர்த்துப் பயன்தரலாம்). திரு ஜிஜி. லார்ஜ் சாமுவேல் அவர்கள் தலைமை ஆசிரியராக உள்ள இப்பள்ளியில் மூன்று துணை ஆசிரியர்கள் சிறப்பாக பணிபுரிகின்றனர்.

அண்ணலின் அரும்பணியில் தங்கள் மனம், மொழி, மெய்களை ஈடுபடுத்தி தியாக வாழ்க்கை - இலட்சிய வாழ்க்கை

வாழ்ந்து வரும் தியாகச் செம்மல்களின் சீரிய வரிசையிலே சேர்க்கப்படவேண்டிய ஸ்ரீ மான் (கல்லுப்பட்டி) ஸ்ரீ நிவாசன் ஐயா அவர்கள் இங்கு நிர்வாகியாகப் (Co-Ordinator) பணிபுரி கின்றனர், அவர்களது அன்பான, கனிவான உபசாரம், வர வேற்பு அனைவர்க்கும் படிப்பினைத் தரவல்லது என்றால் அது மிகையாகாது.

கொடைவள்ளலும், அருள் வள்ளலும் ஆகிய பெரும்நிலக் கிழார் திருமிகு சி. ஏ. கே. இரத்தினசபாபதி அவர்கள் இந்நிறு வனங்கள் முழுவதற்கும் கரஸ்பாண்டெண்டாக இருந்து இயக்கி வருகிறார்கள். அவர்களது திரிகரண சுத்தியுடன் கூடிய சேவையும், அன்பும், அடக்கமும் பாராட்டிப் புகழத்தக்கன.

'குடத்தில் உள்ள விளக்குப்போல' இந்தஸ்தாபனங்களின் பெயர், ஆக்கப்பணி பலருக்குத் தெரியாமல் உள்ளன. அதை நீக்கி, இதன் பெருமை, புகழ்தனை ''குன்றின் மேலிட்ட விளக் குப் போல'' எங்கும் பிரகாசமாய், ஆனந்தமாய் விளங்கத் துணை செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். எழுதவேண் டும் - அச்சிட்டுப் பரப்பிட வேண்டும் – என எளியோனின் உள் ளம் துடித்தது - துணிந்தேன் நல்லெண்ணம் கொண்ட சான் றோர்களும், ஆன்றோர்களும் ஆசி வழங்கினார்கள். அது என்னை வழி நடத்திச் சென்றது - பணியைத் தொடர்கிறேன்.

காந்தி கிராமத்தின் 1976-77 ஆம் ஆண்டின் வருடாந்திர வரவு செலவுத் திட்டம் சுமார் 72 லட்சம் ரூபாய். மத்திய மாநில அரசுகள் வழங்கும் மானியங்கள் தவிர பற்றுக்குறை வருடத்தில் சுமார் ரூ. 3,44,000 ஏற்படுவதை நண்பர்கள், அனுதாபிகள், மாநில அரசுகள் உதவியுடன் ஈடு செய்யப்படு கிறது. இந்நிறுவனங்களுக்கு வழங்கப்படும் நன்கொடை களுக்கு வருமானவரி விதிப்பிலிருந்து விலக்கு உள்ளது. அருள் உள்ளம் கொண்ட அருளாளர்கள், நிறுவனத்திற்கு நேரில் விஜயம் செய்து, பார்வையிட்டு, உள்ளப் பாங்கின்படி தங்க

ளாலியன்ற பேருதவி, பொருளால், உடலால், உள்ளத்தால் நல்கியருள வேண்டுகிறோம்.

இம்மாபெரும் நிறுவனத்தை ஸ்தாபித்து, பேணிக்காத்து வளர்த்துவரும் ''அன்புமாமா'' உயர்திரு ஜி. ராமச்சந்திரன் அவர்களையும் டாக்டர் (திருமதி) டி. எஸ், சௌந்திரம் ராமச் சந்திரன் அவர்களையும் அறியாதவர் அறியாதாரே. இவர்கள், தங்கள் உடல் பொருள், ஆவி அனைத்தையுமே இப்பணிக்காக அர்ப்பணித்துக் கொண்டுள்ளார்கள். இவர்களுக்குத் தாய்' தந்தை, குழந்தை, உற்றார், உறவினர் எல்லோருமே இங்குள்ள மக்கள்சமுதாயம்.மூவாயிரத்திற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட மாபெரும் குடும்பத்தின் பெற்றோராக இவ்விருவரும் விளங்குகின்றனர். இதன் வளர்ச்சியில் அடையும் இன்பமும் மகிழ்ச்சியும் இவர்களது ஆயுட் காலத்தைப் போஷாக்குச் செய் கின்றது.

இவர்களின் தாரக மந்திரம், ''தொண்டு செய்வோம். அன்பு கொண்டு செய்வோம் பாரெல்லாம் கோயில் எனப் பர விடுவோம், நாம் பணியினை யோகம் எனப் புரிவோம். ஊரெல் லாம் சிற்றுலகம் ஆக்கிடுவோம், உள்ளமெல்லாம் தெய்வ ஒளி ஏற்றிடுவோம்'' என்னும் காந்தியடிகளின் பொன் மொழி களாகும்.

இதோ! மூன்றாவது படைவீடு, காணலாம். வாருங்கள் !

காந்தி மியூஸியம் (மதுரை)

அங்கயற்கண்ணம்மையும் ஆலவாய் அண்ணலும் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் கூடல் மாநகரம், நிலவுலகம் என் னும் மங்கை நல்லாளின் மார்பகத்தே விளங்கும் பாண்டிய நாடெனும் பதக்கத்தின் நடுநாயக மணியாய் இலங்குவதாகும்.

சமூகம், அரசியல், பொருளாதாரச் சிறப்புமிக்க இம்மாநகர் மதுரைக்கு ஐந்துமுறை அண்ணல் காந்தியடிகள் எழுந்தருளி ஞர்கள்.

1. மார்ச் 26 – 28 1919; ரௌலட் அடக்குமுறைச் சட் டத்தை எதிர்த்துச் சத்தியாக்கிரகம் செய்யத் தொண்டர்களைத் திரட்ட.

2. செப்டம்பர் 20, 22, 1921: 251-ஏ, மேலமாசிவீதி யிலிருக்கும் வீட்டில் தங்கியிருந்தபோது காந்தியடிகள் முதன் முறையாக இடுப்பளவு மட்டும் ஆடை அணியத்தொடங்கினர்.

3. செப்டம்பர் 28, 30, 1927: சுதேசி கதர் பிரச்சாரத் திற்காக நிதி திரட்ட.

4. ஜனவரி 25, 27, 1934- அகில இந்திய ஹரிஜன பாத யாத்திரையின்போது தக்கர் பாபா, மீராபென் ஆகியோ ருடன் 'மதுரைக் காந்தி' எனப் பாராட்டப்பெறும் காந்திபக் தர் உயர்திரு. N M. R. சுப்புராமன் அவர்களது இல்லத் தில் மகாத்மாஜீ தங்கியிருந்த பெருமையும் சிறப்பும் உயர் திரு N. M. R. S. அவர்களுக்கு உண்டு.

5. பிப்ரவரி - 2 3, 1946:- ஹரிஜனங்களுக்கு ஏற் கனவே திறந்து விடப்பட்டிருந்த ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத் தில் வழிபாடு செய்ய.

காந்தி மியூஸியம், மதுரை மருத்துவக் கல்லூரிக்கருகில் அல்லது தமுக்கம் கலையரங்கத்திற்கு சிறிது தொலைவில் அமைக்கப்பட்டுள்ளது. (மாவட்ட ஆட்சியாளர் அலுவலக பஸ் நிலையத்தில் இறங்கி வழி கேட்டுச் செல்வது எளிதா யிருக்கும்.)

மனிதருள் மாணிக்கம், ஆசியாவின் ஜோதி, பண்டித ஜவஹர்லால் நேரு பெருமகனுர் அவர்களால் 15, ஏப்ரல் 1959ல் தொடங்கி வைக்கப்பட்டது இது.

சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர் பொருளாட்சி நடத்துவோர் (மதுரையை ஆண்ட இராணி மங்கம்மாள் அவர்களால் கட்டுவிக்கப்பட்டு, அந்நிய ஆட்சியில் மாவட்ட ஆட்சியாளர்கள்) உரிமையில் இருந்த மாளிகை, அருளாட்சி நடத்திய அண்ணலாருடைய நினைவுச் சின்னமாக அமைந்தது இக் கட்டிடத்திற்கு ஏற்றத்தைத் தரவல்லதோடு மட்டுமின்றி, ஆன்ருேர் வாய்மொழியையும் மெய்ப்பிக்கும் வகையில் அமைந்ளது.

நுழைவாயிலில், நிற்கும் கோலத்தில் உள்ள அண்ணலின் திருவுருவச்சிலே இன்பத்தையும், துன்பத்தையும் சமமாகப் பாவித்து, ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை நிலேநாட்டப்புரிந்த நவகாளி யாத்திரையை நினைவுபடுத்துகின்றது.

காந்தியடிகளின் குடிசை - சேவாகிராமம்

Bapu Kutir - Sevagram (Replica)

வார்தா நகரிலிருந்து நான்கு மைல் தொலேவிலிருக்கும் சேவா கிராமத்தில் உள்ள இதே போன்ற குடிசையில் 1936 முதல் 1946 வரை காந்தியடிகள் வசித்து வந்தார்.

இக்குடிசையிலிருந்துதான் அவர் தம் பல்வேறுநிர்மாணத் திட்டங்களே உருவாக்கிச் செயல்படுத்தினுர். மேலும் 1942-ல்

சரித்திரப் புகழ்பெற்ற ‘‘இந்தியாவை விட்டு வெளியேறு’’ (Quit India) என்னும் தீர்மானத்தையும் தயாரித்தார்.

குடிசையினுள் சென்றதும், அவர் இருந்த இருக்கையின் பக்கத்தில் மூன்று குரங்குப் பொம்மைகளைக் காணலாம். ஒன்று தனது இரு கைகளால் வாயையும், மற்றொன்று காதுகளையும், பிரிதொன்று கண்களையும் மூடிக்கொண்டிருக்கும். இவை முறையே தீயவையும், பிறர் மனத்தைப் புண்படும் சொற்களையும் பேசாதே; தீய சொற்களைக் கேளாதே; தீய காட்சிகளைப் பார்க்காதே; இவை உனது அகத்தூய்மை, புறத்தூய்மையைக் கெடுத்து விடும் என்னும் தத்துவங்களை எப்பொழுதும் நினைவுறுத்திக் கொண்டேயிருக்கின்றன.

சுவரில் தொங்கும் சட்டக் கண்ணாடியில் ‘‘When you are in the right, you can afford to keep your temper and when you are in the wrong, you cannot afford to lose it’’.

G. C. Larimer.

என்று உள்ளது.

அண்ணலின் திருவுருவத்தின் வலக்கைப் பக்கம் உள்ள Thought for the Day (17—7—76ந் தேதியது) அமுதவாக்கு:

We do not wish to see our own faults. But take delight in perceiving the faults of others. Much unhappiness arises from this habit. —Mahatma Gandhi.

‘‘பெரியோர்களிடத்தில் குற்றம் காண்பதில் நான் குருடனாகவே இருந்திருக்கிறேன்’’ என்னும் கொள்கையை வலியுறுத்துவதாக அன்றைய நாளின் பொன்மொழி உள்ளது.

மகாத்மாஜியின் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க பற்பல புகைப்படங்கள், ஓவியங்கள்

அடங்கிய கண்காட்சி, காண்போர் உள்ளத்தை உருக்கும்; கண்டோர் மனதை மகிழ்விக்கும்; புத்துணர்ச்சியூட்டும்.

அக்காட்சியில் காந்திஜியால் பயன்படுத்தப்பட்ட பொருட்களாகிய, மூக்குக் கண்ணாடி, உல்லன் சால்வை, சேவா கிராமத்தில் உணவு அருந்தப் பயன்படுத்திய கரண்டி, கைக்குட்டைகள் இரண்டு, 1942 முதல் 1945 இல் ஆகாகான் அரண்மனையில் பயன்படுத்திய மரப்பாதரட்சைகள், தலையணையும் படுக்கைத்துண்டும், சால்வை, பஞ்சகனியில் 1945ல் பயன் படுத்திய தோல் காலணி; அவருக்கு சன்மானம் அளிக்கப்பட்ட, வெள்ளியினால் செய்யப்பட்ட மாதுளம் பழம்; அவர் கைராட்டையில் நூற்ற சிட்டம்; பயன்படுத்திய மேல் துண்டு ஆகியவை உள்ளன. இவைகளை ஒருமித்துக் கண்முன் நிறுத்தி வைத்துப் பார்த்தால் அண்ணலின் முழுவுருவம் காணலாம்.

January 30th is a bad day not only to India but also to the universe.

1948, ஜனவரி, 30, அண்ணல் அமரராகும் தருணத்தில் அணிந்திருந்த ஆடையில் குருதி தோய்ந்த ஒரு பகுதியைக் (Blood Stained Cloth-original) காண்போர் கலங்குவர்.

மகாத்மா காந்தியடிகள் அமரராவதற்கு முந்தயநாள் (29—1—1948) கூறிய செய்தி,

நான் சுடப்பட்டு மரணம் அடையநேர்ந்தால் முணுமுணுக்காமல் குண்டடியை ஏற்று இறைவன் திருநாமத்தை உச்சரித்துக் கொண்டே உயிர்நீக்க வேண்டும். அப்பொழுதுதான் என்னுடைய குறிக்கோளுக்கேற்ப வாழ்ந்தவனாவேன்.

காந்தியடிகள் (29—1—76)

காந்தியடிகள், தம் வாழ்நாட்களில் எவ்வளவு சிறப்புடன் வாழ்ந்தனரோ, அதனைக் காட்டிலும் சிறப்புமிக்க முறையில்

விரும்பின முறையில் (ஹரேராம், ஹரேராம், என்னும் ராம நாம தாரக மந்திரத்தை) அவருக்கு மரணம் எய்தியது.

'இப்பேர்ப்பட்ட மஹான் நம் உலகில் வாழ்ந்தார், நடந்தார், உலவினர் என்ற செய்தியை வருங்கால மக்கள் நம்பத் தயங்குவார்கள்' என்று ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் சொல்லியுள்ள கூற்று சிந்திக்கத்தக்கதாக உள்ளது.

சுமார் இருபத்தெட்டு ஆண்டுகளுக்கு முன்பாகக் காந்தி மகானை மூன்று துப்பாக்கிக் குண்டுகள் நம்மிடமிருந்து பிரித்து எடுத்தபோது நம் நாடு மட்டுமல்ல, உலகமே துயரக்கடலில் ஆழ்ந்தது. அப்பொழுது, அவரது தனிப்பெரும் அன்புக்குப் பாத்திரமாயிருந்த நேரு பெருமகனர் நமக்கு வழி காட்டினர். அவரும், அவரைப்போன்ற முதுபெரும் தலைவர்களும் அநாதையானர்கள். அந்த ஆழ்ந்த துக்கத்திலும்கூட மன தைரியத்தை இழக்கவில்லை. மக்களிடம் நேரு அவர்கள் தெளிவாகக் கூறியதாவது, அழுகையை நிறுத்தி விடுங்கள். நிமிர்ந்து நின்று அவரவர்களுடைய வேலைக்குத் திரும்புங்கள்; என்றார். எல்லோரும் தங்களுடைய சக்தியை ஒரு முகப்படுத்திக் காந்தியக் கொள்கைகளைக் கடைப்பிடித்து இதை விட உன்னதமான இந்தியாவையும் உயர்ந்த உலகத்தையும் உருவாக்குங்கள் என்றார்.

ஈடு செய்யமுடியாத பேரிழப்பிலிருந்தும், துன்பத்திலிருந்தும் மக்கள் புத்துணர்ச்சியுள்ள தைரியத்தோடும், உள்ளத்தோடும் இருக்க வேண்டுமென்றும் விரும்பினர். அவர் விட்டுச் சென்ற அணையா விளக்கை ஏந்திச் செல்ல வேண்டும். அஞ்ஞானம் அகலும், அறிவு ஒளி எங்கும் பிரகாசிக்கும். இந்த அறிவு ஒளி அன்பு மயமானதாக இருக்கட்டும்; அறிவு அகிம்சையை வலியுறுத்தவும், நிலை நாட்டவும் பயன்படுத்தப்பட்ட

டும், அறிவு, தன்னைத் தான் ஆத்ம சோதனை — சத்தியசோதனை செய்து கொள்ளத் துணை புரியட்டும்.

ஆனால் மகாத்மா வாழ்கிறார்; அவர் உருவாக்கித் தந்த நிர்மாணத் திட்டங்களில் அவரைக் காணலாம். அவரது தரிசனம் பெறலாம்-என்னும் பேருண்மையை நம்பிச் செயல்பட்டு வரும், காந்தியத் தொண்டர்களின் உள்ளங்களில் சொற்களில் செயல்களில் அவர் வாழ்கிறார்.

இங்கு நடைபெறும் ஆக்கப் பணிகளில் சில:-

மகரிஷி ஆக்க அறிவு நிலையம் (Maharshi Institute of Creative Intelligence)

காந்தி சிந்தனைக் கல்லூரி (College for Gandhian Thoughts Sociology Study Circle,) சமூகப் படிப்புக் குழு

யோகாசனப் பள்ளி (Yoga School)

முதலியவை தமக்கே உரித்தான வளர்ச்சியில் ஈடுபட்டுள்ளன.

இன்னபிற திட்டங்கள் :- காந்தி நூற்றாண்டு விழாவின் போது காந்தி நினைவு நிலையத்தில் (1965-1972) பள்ளி மாணவர்களுக்காக்க் காந்தி கல்வித்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. மதுரையில் உள்ள சுமார் 20,000க்கும் மேலான மாணவர்கள் 40 முதல் 60 பேர் கொண்ட குழுக்களாக வந்து, ஒரு நாள் தங்கி, காந்தியடிகளில் சீரிய கருத்துக்களைக் கேட்டுப் புரிந்து கொண்டு, ''அன்பு வழி நடந்த அண்ணல்'' என்னும் புத்தகம் ஒன்றையும் நற்சான்றிதழையும் பெற்றுள்ளனர்.

தற்போதையப் பணி:- தற்சமயம் கல்லூரி மாணவர்களுக்காக பிரத்யேகமாக இந்திய சுதந்திர வரலாற்றின் கண்காட்சி ஒன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. கல்லூரி மாணவர்கள் குழுக்களாக இங்கு வந்து ஷை கண்காட்சியினைக் கண்டும், மறறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றும், சுதந்தர இயக்கத்தில் காந்தியடிகளின் சீரிய தலைமையையும், புதிய உலகப் பிரசித்தி பெற்ற தத்துவங்களையும் அறிந்து கொள்வதற்கு முயற்சி செய்யப்பட்டு வருகின்றது.

நூலகமும், ஸ்டேடியமும் :- தமிழகத்திலுள்ள சிறந்த, பெரிய நூலகங்களுள் ஒன்ருகும். இதில் காந்தி மகானைப் பற்றிய நூல்களும், இன்ன பிற நூல்களுமாக சுமாக 20,000 உள்ளன. நாள்தோறும் பொதுமக்கள் படித்துப் பயன்பெறுகின்றனர்.

சுமார் பத்தாயிரம் பேர் அமர்ந்து நிகழ்ச்சிகளைக் கவனிக்கும் வண்ணம் அமைக்கப்பெற்ற, திறந்த வெளிக் கலையரங்கம் பிரமாண்டமாக உள்ளது.

வருகை தந்த பெரியோர்கள்: (Distinguished visitors)

Pandit Jawaharlal Nehru 15, ஏப்ரல் 1959

Srimathi Indra Gandhi 1969.

Prof. Dorothy Hodgkin (Nobel Prize Winner) 22, 23 ஜனவரி 1967

Shri M. Bhaktavatsalam Chief Minister, Madras

Dr. Koto Matsudaira, Ambassador of Japan in India.

Shri P. Thimma Reddi, Chairman, Khaddi & Village Industries, Board, Andhra Pradesh.

G. Bollentine Henlor, President, California College for Medicine, U. S. A.

Shri Morarji Desai, Ex. Finance Minister, Government of India

Shri Y. M. Dadov Indian Congress Leader in South Africa.

Shri Kanu Gandhi and Smt. Aba Gandhi on 26–10–67

Shri C. N. Annadurai, Chief Minister of Tamil Nadu on 16–4–1967.

Srimathi Indira Gandhi Prime Minister of India 14–9–76, & 15–9–76,

அறிஞர் அண்ணா அவர்கள் பார்வையாளர் புத்தகத்தில் கீழ்க் கண்டவாறு எழுதியுள்ளார்.

"This Museum has displayed in attractive manner the heart touching events of Gandhiji's life and this inspires everyone to follow Gandhian Thought. Splendid endeavour. My felicitations.

மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டுப் பேரறிஞர்கள் விஜயம் செய்துள்ளனர்.

நிர்வாகம்: மகாத்மாஜீயின் கொள்கைகளால் ஈர்க்கப் பட்டுத் தனது வாழ்நாள் முழுதும் அவரது கொள்கைகளை நிறைவேற்றத் தன்னைத் தன் குடும்பத்துடன் அர்ப்பணித்துக் கொண்ட பல தியாகச் செம்மல்களுள் ஒருவர் ஸ்ரீமான் ஜி. ராமச்சந்திரன் அவர்கள். இவர் இந்த நிறுவனத்தின் தலைவர் ஆவர். செயலாளராகப் பணி புரியும் திருமிகு ஜி. எம். தத்தா அவர்கள் வங்காள மாநிலத்தைச் சேர்ந்த ஓர் இளைஞர். தமிழ் நாட்டில் அமைந்துள்ள இந்நிறுவனத்தின் வளர்ச்சிக்காக் அய

ராது உழைத்துவரும் பெருந்தகையாளராகிய இவர் அமெரிக்க நாட்டில் படித்துப் பட்டம் பெற்றவர். தேசீய ஒருமைப்பாட்டிற்கும், ''ஜய் ஜகத்'' (வையம் வாழ்க) தத்துவத்திற்கும் இவர் வாழ்க்கை ஓர் எடுத்துக் காட்டாகும். அலுவலக மேலாளர் திருமிகு. துரைசாமி அவர்கள் வரவேற்புத்துறைப் பிரிவு அலுவலர் திரு. கே. எஸ். ராஜாராவ், நூலகர் திரு. ஜெகந்நாதன், ஆகியோரின் அயரா உழைப்பினுல் பணி சிறக்கிறது; வளர்கிறது.

பொருளாதாரம்: சுமார் பதிமுன்று லட்சம் ரூபாய் முதலீடு செய்யப் பெற்று அதன்மூலம் கிடைக்கும் வட்டித்தொகையின் உதவியால் இந்நிறுவன நிர்வாகம் சீராகவும் சிறப்பாகவும் நடைபெறுகின்றது.

இயற்கையிலோ செயற்கையிலோ அன்ருடம் காணும் காட்சிகளினின்றும் பல பாடங்கள், நீதிகள் தெரிந்து கொள்ள ஏராளமான வாய்ப்புகள் ஆண்டவன் நல்கியிருக்கிருன். அக் கண்ணேட்டத்துடன் ஒவ்வொன்றையும் கவனித்துக கொள்ளத் தக்கவைகளைக் கொண்டு, தள்ளத் தக்கனவற்றைத் தள்ளுவதுதான் பகுத்தறிவு படைத்தவன் செய்யும் செயல்.

மலரில் மது வருந்தும் வண்டு, தனக்குத் தேன் வேண்டுமென்ற ஆசையால் - அதாவது சுயநல எண்ணத்தால் தேன் உண்கிறது-அனுபவிக்கிறது. ஆனுல் அதனறிவிற்கு எட்டாத யாராலும் செய்ய இயலாத ஓர் செயல் அப்பொழுது நடைபெறுகிறது. அவ்வண்டின் கால்களில், அம்மலரில் இருக்கும் மகரந்தத் தூள்கள் ஒட்டிக்கொள்கின்றன. அதே வண்டு பிற மலர்களில் தேன் உண்ணச் செல்லும்பொழுது அம்மகரந்தத் தூள் அடுத்த மலரில் உள்ள சூல் முடியில் (Stigma of the gynecium) வீழ்ந்து அயல் மகரந்தச் சேர்க்கை (Cross Polir-mation) ஏற்பட்டு இன விருத்தி ஏற்படுகின்றது.

ஆண்டவன் படைப்பைப் பார்த்தீர்களா? இந்த இயற்கைச் செயலிலிருந்து நாம் அறிந்துகொள்ளும் நீதி: வண்டினம் தன்னை அறியாமலேயே, தாவர வம்ச விருத்திக்குக் காரணமாக அமைகின்றதே, நாமோ பிறர் வாழ, பிறரை வாழ்விக்க, பிறருக்காக வாழ்கிறோமா. சற்று சிந்தனை செய்து பார்ப்போம்.

அண்ணல் அவர்கள் மாணவப் பருவத்திலே அரிச்சந்திர நாடகத்தைப்பார்த்து மனம் மாறினர்' இனி பொய் சொல்வதில்லை எனக் கங்கணம் பூண்டார். ஆனால் நாமோ பல முறை பார்த்து விட்டோம். மனம் . . . . .

ஜான் ரஸ்கின் எழுதிய 'கடையனுக்கும் கதிமோட்சம் (UNTO THE LAST) நூலைப் படித்தார் மனம் மாறியது - வாழ்க்கைப் பாதையை மாற்றிக் கொண்டார் - தொண்டுள்ளம் கொண்டார்: நாமோ பல நூல்களைப் படிக்கிறோம் என்ன விளைவு

மதுரை மாநகரத்திற்கு விஜயம் செய்யும் அன்பர்களும் நண்பர்களும், அங்கயற்கண்ணி ஆலயம், திருமலை நாயக்கர் மகால், மாரியம்மன் தெப்பக்குளம், திருப்பரங்குன்றம், பழமுதிர்ச்சோலை சென்று தரிசிப்பது போன்று இந்த் மாபெரும் நிறுவனத்தையும் கண்டு உள்ளுணர்ச்சி பெறுவார்களாக,

இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ள முப்படைவீடுகளாம் (1) காந்தி ஆசிரம் (2) காந்தி கிராம் (3) காந்தி மியூஸியம் ஆகிய மூவிடங்களும் காந்தி கனவு கண்ட ''பரம ஏழையும் இந்தியா தனது நாடு என்று உணருவான்; அதன் மறு மலர்ச்சியில் பங்கு பெறுவான்; ஆணும் பெண்ணும் சம உரிமை பெறுவர்; மது ஒழியும்; தீண்டாமை விலகும், இதுவே நான் காணும் இந்தியா,'' என்ற அண்ணலின் கனவை நனவாக்க

அண்ணலின் அடிச் சுவட்டைப் பின்பற்றிச் செயலாற்றி வருகின்ற மாபெரும் நிறுவனங்களாகும்.

இப்பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு வாழ்நாள் முழுவதும் பணிபுரியும் ஏராளமான தொண்டர்களும் தியாகச் செம்மல்களும் உள்ளனர். அவர்கள் தங்களது பெயர்களைக் குறிப்பிட விரும்புவதில்லை. அவர்கள், ஆலயத்தைத் தாங்கி நிற்கும் அஸ்திவாரம் போல, தம்மைத் தாமே கரைத்துக் கொண்டு இவ்வாலயங்களைத் தோள்களில் சுமந்து வருகின்றனர். இந்நிலைவாலயங்களில் பெயர், புகழ் விரும்பாத உத்தமர் பலர் உள்ளனர். அவர்களது பேராற்றலாலும், தொண்டுள்ளத்தாலும், அன்புமொழியாலும். திண்மையான கொள்கைப் பிரச்சாரத்தினாலும் காந்தீயத் தத்துவங்கள் பற்பலதுறைகளில், உயிரோட்டத்துடன் வளர்ந்து வருகின்றன. இப்பெருந்தகையாளர் அனைவருக்கும் என் பணிவான வணக்கங்களைக் கனிவான முறையில் காணிக்கையாக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

முடிவுரை :

அன்பு, அகிம்சை, சத்தியம். ஆகியவைகளைத் தமது மூச்சாகவும், பேச்சாகவும், முதலீட்டாகவும் கொண்டு அவைகளை நிலைநாட்ட வாழ்ந்து மறைந்த அமரர் அண்ணலின் திருவடிநிழலின் கீழ் நின்று. மனம், மொழி, மெய்களால் அவரது கருத்துக்களைப் பரப்பி, உலகில் நமது நாடு ஏறு நடை போட அயராது உழைப்போமாக ! அவரது திருவருள் என்றும் நம்மை வழி நடத்தும்!!

வாழ்க காந்தீயம் !!!

பிழைத் திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
5	19	நிறுவப்பட்டு	நிறுவப்பட்ட
6	26	அஸ்ரம்	ஆஸ்ரம்
7	17	அவர்கனைவரும்	அவர்களனைவரும்
,,	22	வகித்தும்	வகித்ததும்
11	13	வ்யக்த பக்தியுடன்	வ்யக்தி பக்தியுடன்
13	3	தொடங்கிய	தொடங்கியது
,,	17	பல்கலைக்கழகமரக	பல்கலைக்கழகமாக
14	1	முக்கிய	முக்கிய
15	17	வந்த	அந்த
,,	21	ஏகினோம்	ஏகினேன்
16	10	8 5—76	8—5-76
16	12	கிராமபுணருத்தாரணம்	கிராமப்புனருத்தாரணம்
18	16	மணநிறைவு	மனநிறைவு
21	29	பணியாளருமாக	பண்பாளருமாக
22	23	இத்துனை	இத்துணை
23	5	கல்யாணபுரம்	கல்யாணிபுரம்
23	7	செல்வனே	செவ்வனே
23	23	திரு ஜிஜி.	திரு. ஜி. ஜி.
30	2	மந்திரத்தை	மந்திரத்துடன்
,,	27	பயன்படுத்தப்பட்டடும்	பயன்படுத்தப்படட்டும்
31	21	காந்தியடிகளில்	காந்தியடிகளின்